உ

பரமபதி துணை.

மகாமகத்துவம் பொருந்திய

அகத்தியர்

திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய பூரணம் 205.

ஷை சூஸ்திரம் 21 ம் சேர்ந்தது.



ஜி. இராமசாமிக் கோன்

இ. ராம. குருசாமிக்கோனர் சன்

புத்தகசாலை புதுமண்டபம் மதுரை.

பதிப்புரிமை. 1957 விலை ரூ 1—0—0

5.70 24.2.66

உமக்குக் குருவி

நன்றி வெளை ஒர் பகாகச்சி
சாம்பி உண்ணும் முதலிய சகல
வோககங்களையும் நீக்கும் [illegible]
நினைவை நீக்கு மானைகயால் அதே
குளயாபடுத்தும் அவ்வது நமஉகு ஆகா
ககிராணிகாரிகமாகும். சிக்கள
பருவர்களுக்கு வேண்டும் மதயான
சகலமருந்துகளையும். நீக்கும்

மருக்கக்கு குருவி. 16-நிமிடம்

அல்லாட்டணைக்கை நீதிவில்
உலக்ககி இதுதா வஸ்தி ஏகா
யம் செய்துக் கொள்ள வேண்டி
யது சிராணாய் போகாமல் ஒருக்
காரக்கி புட்டி வீல் வைதாக்கொ
ண்ண வேண்டியது இதை விரைக
ளிடை கலை மாலை செய்யில்
கு ஜைக்குதாசாய் பீடை ஸகிரி
கள் புருஷர்களுக்கும் புருஷர்
கள் ஸ்திரீகளுக்கும் வைக்க
சரிபடுத்து இருக்கிடம்
உதிர்யாமல் நிரிக்க
ஒதுக்கி போகும்.

உ

பரமபதி துணை.

அகத்திய முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்ய பூரணம் 205.

## ஷை சூத்திரம் 21ம் சேர்ந்தது

---

மதுரை வித்துவான்,

த. குப்புசாமி நாயுடு அவர்கள்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

மதுரை, புதுமண்டபம் புத்தகசாலை,

இ. ராம.

குருசாமிக்கோனார் சன்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார்சந்து,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்] 1956 [விலை ரூ. 1—0—0

இரண்டாம் பதிப்பு. காப்பி 750.

5.70

உ

பரமபதி துணை.

அகத்திய முனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்ய பூரணம் 205.

ஷை சூத்திரம் 21ம் சேர்ந்தது

மதுரை வித்துவான்,

த. குப்புசாமி நாயுடு அவர்கள்

பரிசோதித்த பிரதிக்கிணங்க

மதுரை, புதுமண்டபம் புத்தகசாலை,

இ. ராம.

குருசாமிக்கோனார் சன்

அவர்களாற்றமது

மதுரை, வடக்குமாசிவீதி, குருசாமிக்கோனார்சந்து,

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட்] 1956 [விலை ரூ. 1—0—0

இரண்டாம் பதிப்பு. காப்பி 750.

உ
கடவுள் துணை.

## அகஸ்திய முனிவர்
திருவாய் மலர்ந்தருளிச் செய்த

# வைத்திய பூரணம்-௨௱௫

காப்பு.

ஆதிமுதற் பூரணமாம் பொருளைப்போற்றி
அம்பிகையி னடிபகலு மல்லும்போற்றி
ஜோதிமிகு காரணசற் குருதாட்போற்றி
சொலற்கறிய நாதாக்கள் துணைத்தாட்போற்றி
வேதன்மகிழ் கலைவாணி சரணம்போற்றி
வேதாந்த விளக்கொளியின் கமலப்போற்றி
நாதமிகு பாருதா ரத்தாட்போற்றி
நளினமிகுங் கணபதிபூ ரணத்தாட்காப்பே.

பிணிவருகிற நேர்மை

பூரணமாய் மும்மூலம் பொறியிற்சூடாம்
புகையெழும்பி மேகத்தாற் சிரசிற்சூடாம்
காரணமாய் நீர்கலந்து கனரோகங்கள்
கனன்றெழுந்த வாய்வதனாற் சூலைரோகம்
வாரணமாய் வாதத்தி லெழுந்தமேகம்
மத்தியமாம் பித்தத்திற் கிராணியாச்சு
தாரணமாய் வாய்வதனாற் குன்மமாச்சு
சார்ந்திடவே சிலேற்பனந்தான் ஐயமாமே. (1)

ஆமப்பா வாதத்தா லிரணமுண்டாம்
அஸ்தியினிற் சூடுகொண்டாற் சுரங்கள்காணுங்
காமப்பா லாவியினால் மேகமுண்டாங்
கைகடந்த போகத்தால் பிறந்தரோகந்
தாமப்பா மேகத்தாற் பிறந்தரோகந்
தரணியினு லாயிரத்துச் சில்வாணந்தான்
ஓமப்பா மேகங்க ளிருபத்தொன்றும்
உலகத்தில் நீரிழிவா யுதித்தவாறே (2)

வாருன பித்தத்தா லுஷ்ணரோகம்
மருவியதோர் வாதத்தாற் சீதரோகந்
தேருத வையத்தாற் கபரோகந்தான்
திரண்டெழுந்த வாயுவினுல் மூன்றுமாச்சு
கூருன தசவாய்வு தொந்தங்கொண்டு
கொடியகனல் வாதமுடன் விந்துவாகி
ஏருத விந்ததனிற் பிறந்தமேக
மெழுந்தபித்த சிலேற்பனத்தி லிருந்ததாமே (3)

ஆமிந்த நூற்குநிக ரொன்றுமில்லை
மறிந்திந்த நூல்பார்த்தார் சித்தர்க்கொப்பும்
போமேகேள் நூல்கண்டால் நோய்கள்போகும்
பொன்வெள்ளி ரண்டுமிந்த நூலுக்குள்ளே
நாமப்பா நுணுக்கமுண்டு யார்க்குச்சொன்னேம்
நல்லோர்க்கு சொல்லியே நாட்டவேணும்
ஓமிந்த நூல்பார்த்து வயித்தியஞ்செய்தால்
உத்தமனே பிர்மரிஷிக் கொப்பாங்காணே. (4)

காணப்பா யோகமு விகையினுலே
கட்டான கிரதங்கள் சூரணங்கள்
பூணப்பா தைலங்கள் பற்பங்கள்தான்
பூட்டினேன் ரசாயணங்கள் கியாழத்தோடு
தோணப்பா சுளுவுமெத்த வுலகத்தோர்க்குச்
சொன்னநூ லிதுபோலச் சுருக்கமில்லை
நாணப்பா அருணனைப்போற் செந்தூரங்கள்
நாட்டுகிறேன் வெகுலேசு நன்ருய்க்கேளே. (5)

கேளப்பா தயிலங்கள் செந்தூரங்கள்
கெடியான சித்தருக்குஞ் சிவயோகிக்கும்
வாளப்பா வுலகத்திற் பண்டிதர்க்கும்
வழுத்தினே னிருநூற்றி யைந்தினுள்ளே
நாளப்பா சாத்தியமாம் ரோகந்தீர
நாட்டினேன் மூந்நூற்றி லசாத்தியம்போக
வேளப்பா விந்நூலை வைத்துக்கொண்டு
வேணபடி வயித்தியத்தை விரும்பிச்செய்யே. (9)

செய்வதற்கு வெகுசூட்சஞ் சொல்லிவிட்டேன்
ஜெகத்திலே பிழைப்பதற்கே யெளிதாமிந்நூல்
கைவசத்தில் வந்தமுதற் சிலவுமில்லை
கண்டுமற்றப் பெரியோர்க்கு மெளியோர்க்குந்தான்
மெய்யிலுள்ள வினைகளெல்லா நீங்கிப்போகும்
வீண்சாஸ்திரம் பார்த்தவர்கள் மயங்கிப்போவார்
நெய்மிகுந்த பால்போலே செந்தூரங்கள்
நிகழ்த்துகிறே னிசமாகப் பற்பந்தானே. (7)

## பற்ப காண்டம்

பற்பமா கின்றவகை யதனைக்கேளும்
பாடினேன் பலநூலின் காரசாரஞ்
செப்புகிறேன் மூலிகையி னீறிற்றானல்
சீடனுக்கு மனத்தெளிவு தானுண்டாகும்
எப்போது முண்டுவரப் பயமேயில்லை
யிந்நூலை யெளிதாக வியம்பவேண்டாம்
நுட்பவகை யென்னூலிற் தப்பாதப்பா
நுணுக்கமாய்ச் செய்தொழிலி னுண்மைபாரே. (8)

### அய பற்பம்

நுண்மைபெற அயத்தகடு நெற்கனந்தான்
நுணுக்கமாய்ச் சாணகலஞ் சாண்தா நீளம்
வண்மையாய் வீழிவேர் பலந்தானென்று
வாட்டியே மெழுகுபோ லரைத்துப்பூசித்
தண்மையாய் யோட்டில்வைத்தே யோடுமூடிச்
சந்துவாய் சீலைசெய்து கெஜபுடத்தில்
உண்மையாய் வைத்திடவே பற்பமாகும்
உயர்ந்ததிரு நீறுபோற் காணுமென்னே. (9)

என்னவே யிதையெடுத்து வைத்துக்கொண்டு
யெலுமிச்சம் பழமதனை நான்காய்க்கீறி
அன்னவே பழம்பத்துச் சட்டியிட்டே
யதிலேதான் கையாஞ்சார் நாழிவாரு

பன்னவே காடியதில் நாழிவிட்டுப்
பருவமா யவித்துலர்த்தி யெடுத்துக்கொண்டு
தின்னவே பணவிடைகள் சீற்றென்றில்தான்
தீருமடா பாண்டுவகை தீருமநோயே. (10)

காந்த பற்பம்.

தீருநோய் குறைநோயுங் குட்டஞ்சூலை
தேனதனிற் கொண்டிடவே தீருந்தீரும்
பாருநோய் தீர்ப்பதற்குக் காந்தந்தன்னிற்
பற்பத்தைச் சொல்லுகிறேன் பணிவாய்க்கேட்பாய்
ஆருமே செய்வதற்குச் சிறியாநங்கை
யமரிவிட்டே இடித்திந்த சாற்றைவார்த்து
நீருதான் வற்றவற்ற வறைத்துமூன்று
நிசமாக வில்லைசெய்து ரவியில்வைத்தே. (11)

வைத்தவில்லை காய்ந்தபின்பு ஓடுமூடி
வளமாகச் சந்துவாய்ச் சீலைசெய்து
கைத்தபில்லை கெஜபுடத்தில் னீறிப்போகுங்
காந்தத்தின் பெருமைதனைக் காட்டொண்ணாது
சுத்த கிராணியொடு சோகைதீரச்
சொல்லுவோ மாதளங்காய்ச் சாறுவார்த்து
கத்தனுட சுக்குதனை யரைத்துக்கிண்டிக்
காந்தபற்பம் பணவிடைதா னதனிற்கொள்ளே. (12)

கொள்ளவே மண்டலத்திற் றீரும்பாண்டு
கொடிதான ஜலக்கழிச்சல் பிறமேகங்கள்
தள்ளவே நீர்க்கிரிச்சிக் கறுப்பானங்கேள்
சஞ்சீவி சூரணத்தாற் சாந்தமாகும்
உள்ளபடி மூலமொடு கிராணிக்கெல்லா
மூலோகபற்பங் காந்தபற்ப மிரண்டுங்கூட்டி
வள்ளலேகாந்தாரி சூரணத்தில்
வைத்திடவே தீரும்நோய் மகிழ்ந்துகேளே. (13)

தாம்பரச் செந்தூரம்

கேளப்பா தாம்பரத்தின் தட்டுவாங்கிக்
கிருபையுடன் நெற்கனமாய்த் தகடுதட்டி
வேளப்பா வாடுதொடா மூலிவேரும்
வெண்ணொச்சி வேரிரண்டுஞ் சமனாய்ச்சேர்த்து

நாளப்பா எருக்கின்பா லதனுலாட்டி
நலமாகத் தகட்டின்மே லப்பிப்பின்னுஞ்
சூளப்பா வோட்டில்வைத்தே யோடுமூடிச்
சுகமாகச் சந்துவாய்ச் சீலைசெய்யே. (14)

சீலையது மூன்றுசெய்து கெஜபுடத்திற்
சேர்த்திடவே யருணன்போற் செந்தூரந்தான்
ஆலையா குன்மமெட்டுந் தீரவேண்டி
யஷ்டசூ ரணத்துடனே தேனுவுங்கூட்டிக்
காலையொடு மாலையிலுங் கொள்வீராகிற்
காணாத வாயுவர்க்க மெல்லாம்போகுஞ்
சூலையென்ற குன்மவகை தீரவேண்டி
சுருக்காக ரசபற்பஞ் சொல்கிறேனே. (15)

இரச பற்பம்

சொல்லுகிறேன் ரசந்தன்னைச் சுத்திசெய்து
சுகமாகச் சிவகரந்தைச் சார்விட்டாட்டி
அல்லுறேன் மூன்றுநா ளரைத்தபின்பு
யடைபோலப் பிடித்ததனை யுலரவைத்து
மல்லுகிறே னோட்டினில் வைத்தோடுமூடி
வளமாகச் சந்துவாய் சீலைசெய்து
பல்கிறேன் குக்குடத்தில் மாண்டுபோகும்
பணவிடையிற் சூலைபதி னெட்டும்போமே (16)

பதினெட்டுக் குஷ்டமரை யாப்புக்கிரந்தி
பரங்கிக்குப் பணவிடையிற் பனைவெல்லத்தில்
மெதிரிட்ட னேய்சயங்க ளெல்லாந்தீரு
மீறைந்து நாட்கொள்ளு மிருநேரந்தான்
சதிரிட்ட மேகவகை தீரவேண்டிச்
சாற்றுகிறேன் வங்கபற்பஞ் சார்ந்துநீகேள்
அதிரிட்ட வெள்ளீயக் கட்டிவாங்கி
யப்பனே நெற்கனமா யடித்துக்கொள்ளே. (17)

வெள்ளீய பற்பம்

அடித்திட்ட தகடதுவோ பலந்தானென்று
யாடுதொடா மூலிவேர் பலந்தானென்று
துடித்திட்ட வெண்தோன்றிக் கிழங்குமொன்றே
சுகமாக வரைத்ததனை மேலேயப்பி

வெடித்திட்ட வோட்டில்வைத்தே யோடுமூடி
வெண்மையாய் கெஜபுடத்தில் வெளுத்து நீரும்
வடித்திட்ட மேகவகை யிருபதுக்கும்
வைத்திடவே பணவிடைதான் மருவிக்கொள்ளே (18)

மருவியதோ ராவரைப் பஞ்சாங்கம்வாங்கி
மைந்தனே தேன்விட்டு மத்தித்தேதான்
இருபோழுது கொண்டிடவே நீர்ச்சுரப்பு
மியல்பான கல்லடைப்புக் கிரிச்சின்னங்கள்
அருவியென்ற தசையடைப்பு பிறமேகங்கள்
ளணுப்பான மறிந்துசெய்தா லகன்றுபோகுங்
கருவியென்ற காரீயப் பற்பங்கேளு
கருதரிய நொச்சியிலை கவசமாக்கே. (19)

காரீய பற்பம்

ஆக்கியதோர் வெள்ளீயப் பற்பம்போலே
யழகாகப் புடம் போட வெந்துநீறுந்
தூக்கியதோர் சூலையொடு குட்டந்திரும்
சுணைப்புள்ள கிரந்திபிற மேகந்திருஞ்
தேக்கியதோர் திரேகத்தின் காந்தல்தீருஞ்
சீரற்ற நீர்க்கடுப்பு வரக்ஷிதிரும்
பாக்கியமாந் தேகத்தி லுஷ்ணமெல்லாம்
பறக்குமடா காரீயப் பற்பத்தாலே. (20)

வெண்கல பற்பம்.

பற்பமாம் வெண்கலத்தைச் சொல்லக்கேளு
பசளையிலை தனையரைத்துக் கவசஞ்செய்து
அர்ப்பமா யெண்ணூறுதே யோட்டில்வைத்தே
யழகாகக் கெஜபுடந்தான் பெரிதாய்ப்போடு
நூர்ப்பமாய் நீறியது வெள்ளையாகும்
நுணுக்கமடா பணவிடைநெய் தேனிற்கூட்டி
உர்ப்பனமாய்க் கொண்டிடவே சூலைபோகும்
உறப்பான வாய்வுகுன்மம் திரும்பாரே. (12)

திருமே ஜயரோக மிருமல் மாந்தை
சிவசிவா சொல்வேன்வெண் கலத்திினேர்மை
ஊருதனி லிருப்போருக் கிந்நூற்கிட்டில்
யோகவான் வயித்தியத்துக் காதியாகும்
பாருமே யிம்முறையை யறிந்து செய்தால்
பற்பத்தி னிலைமையெல்லாங் காணலாகும்
ஆருமே செய்வதற்கீ தறிந்துசொன்னேன்
அந்தந்த நூற்றேடி யலையவதென்னே. (22)

திராப் பற்பம்

அலையாம லின்னமொரு சேதிகேட்பா
யாச்சரியந் திராவி னுட வதிசயந்தான்
இலையான தும்பையிலை யதனைப் பூசி
யிட்டுவிடு கெஜபுடமே யோட்டில்வைத்து
நிலையான திராத்தகடு நீறிப்போகும்
நீர்க்கிரிச்சி வண்டுகடி சில்விஷங்கள்
குலையான குன்மங்கள் ஜயரோகங்கள்
குஷ்டமொடு சூலைபதி னெட்டும் போமே. (23)

பித்தளைப் பற்பம்.

எட்டாத நிலவாகைச் சூரணத்தி
லினித்தேன்சேர்த் தொருநாளே யிருநேரந்தான்
மூட்டாமற் பத்துதினங் கொள்வீராகில்
மோசமில்லை நோய்களெல்லா முறிந்துநீங்கும்
கட்டாத பித்தளையின் பற்பங்கேளு
காஞ்சொரியின் வேரரைத்துக் கனமாய்ப்பூசி
வட்டான வோட்டில்வைத்தே யோடுமூடி
வைத்திடுவாய் கெஜபுடத்தில் மாண்டுபோமே. (24)

மாண்டுபோம் நோய்கடனைச் சொல்லக்கேளு
வாய்வோடு குன்மமுதல் கிராணிமூலம்
பாண்டோடு நீர்ச்சுரப்பு வாய்நீரூரல்
பாய்கின்ற குடல்வாய்வு பார்சவாய்வு

ஆண்டதொரு வானந்த வாய்வுக்குத்தான்
வருப்பான மறிந்துசெய்தால் நோய்கள் தீரும்
பூண்டநல்ல வொழுகறையைச் சொல்லக்கேளு
புகழான பற்பமொன்று புகலுவேனே. (25)

ஒழுகறை பற்பம்,

புகலுவேன் கஸ்தூரி யறைத்தேயப்பிப்
போட்டிடவே கெஜபுடத்திற் பொருமிநீறும்
ஜெகதலங்கள் மெச்சுமடா விந்தநீறு
தேசத்திற் பண்டிதர்க்குக் கிட்டுமோசொல்
அகலாத பாண்டோடு வீக்கஞ்சோகை
யப்பனே மகோதர நீ ராம்பலோடே
இகலாத நோயதனுக் கனுப்பானங்கேள்
இட்டிடுவா யிஞ்சித்தே னிரண்டினாலே (26)

பால் கருடக்கல் பற்பம்.

நாலான நாள்தனிலே வாங்கிப்போகும்
நரைதிரையு மில்லையடா நமனும்வாரான்
சோலாகச் சொல்லவில்லை பற்பஞ்செய்யத்
தொழிலாளி நீயானாற் செய்துபாரு
பாலான கருடக்கல் நீற்றக்கேளு
பவிசுகெட்ட பண்டிதனே நீற்றப்போருன்
நூலான நூற்களெல்லாம் பார்த்தாலென்ன
நுணுக்கமா யிந்நூலை நோக்குவாயே (27)

வாய்னாலே பேசுவான் வயித்தியஞ்செய்ய
மகாபற்ப வகையொன்று மறியமாட்டான்
பேய்போன்ற வுலகத்திற் பிணியைத்தீர்க்கப்
பெருநூற்குக் குருநூலா மிந்தநூலு
ஆயான வானைப்புல் கிழங்கறைத்தே
யப்பிவிடு கெஜபுடத்தில் நீறிப்போகும்
நோயான உஷ்ணரோ கங்களெல்லாம்
நுகரவே யிருநேரம் வெண்ணெய்யாமே. (28)

வெண்ணெய்யிலே தானருந்த கனரோகம்போம்
மெய்யெல்லாங் குளிர்ச்சிதருந் தெளிவுண்டாகும்
எண்ணெய்யிலே தானருந்தக் கடுப்புத்தீரும்
யெலும்புருக்கி யுள்வரட்சி யேகுமேகும்
மூண்ணவே யஸ்தியுட சுரமூந்தீரும்
முள்ளுருக்கி யுள்ரோக மூலர்த்தல் போகும்
பண்ணவே பால்கருடப் பற்பத்தாலே
பறக்குமடா வெட்டையெல்லாம் பாருபாரே. (29)

கல்நார் பற்பம்.

பார்ப்பதற்குக் கல்நாரின் பற்பங்கேளு
பகருகிறேன் கோங்கிலவம் பட்டைவாங்கி
ஆர்க்கவே யிடித்ததனை வைத்தேயோட்டி
லதன்மேலே கல்நாரை நடுவேவைத்து
வேர்ப்பொழியும் பட்டைபொடி மேலேபோட்டு
மேலோடு மூடியல்லோ சீலைசெய்து
மூர்க்கமாங் கெஜபுடத்திற் போடநீறும்
மூதண்ட கல்நாரின் முறையைக்கேளே. (30)

முறையான பற்பத்தைத் தேனிற்கொள்ள
மூட்டோடே யசைந்தபல் லிறுகிப்போகும்
மறையான சேட்டுமத்தை யறுத்துப்போடும்
மகலாத வுஷ்ணத்தை யடக்கிப்போடும்
பிறையான நாளொன்றுக் கிருபோதுண்ணப்
பேரான சயமிருமல் சுவாசகாசம்
நிறையான மந்தார காசமேகும்
நேரான துதுளேலே கியத்திலென்னே. (31)

நாக பற்பம்.

என்னவே நாகபற்பத் தியல்புகேளு
எலியாலின் பாலிலரைத் திடுகெஜந்தான்
பன்னவே ரவியுலர்த்திக் காய்ந்தபின்னே
பரிவாக வோட்டில்வைத்துச் சீலைசெய்து

முன்னமே சொன்னபடி புடத்தில்நீறும்
 மூதண்ட பற்பத்தின் முக்கியங்கேள்
வன்னமாங் கிராணியொடு மூலரோகம்
 வயிறெரிவு நெஞ்செரிவு வாய்வும்போமே. (32)

வாயுபோ மிதற்கெல்லா மனுப்பானங்கேள்
 வரிசையுடன் திரிகடுகு திரிபலாதி
தூயதிலே லகிரிகஞ்சா பொடித்துச் சேர்த்து
 தோய்தேனிற் தூவிமெள்ளப் பதமாய்க்கிண்டு
நோயதனை யறிந்துண்ண மண்டலந்தான்
 நூற்பாக முன்சொன்ன ரோகந்தீரும்
பாய்கின்ற வெள்ளியுட பற்பங்கேளு
 பாருற்ற ரூபாயை வாங்குவாயே. (33)

வெள்ளி பற்பம்.

வாங்கியே செம்முள்ளி யிலையரைத்து
 மகிமையொடு கவசமதாய்ச் செய்துகொண்டு
தேங்கியே ரூபாயைக் குகையில்வைத்து
 சில்லிட்டுச் சீலைசெய்து முழப்புடத்திற்
தேங்கியே யிட்டிடவே நீறிப்போகும்
 திரமுள்ள வெள்ளிபது பற்பமாச்சு
ஓங்கியே சிமிளுக்குட் பதனஞ்செய்து
 உயர்ந்தகுன்மம் நீர்கட்டு யெல்லாம்போமே (34)

நீர்க்கட்டுச் சதையடைப்பு மயக்கமோடு
 நெஞ்சிலுள்ள கபமெல்லாம் நீங்கிப்போகும்
மூர்ச்செரியு மூர்செல்லா மடங்கிப்போகும்
 மூக்கிலுள்ள நீர்ப்பாய்ச்சற் பீனிசங்கள்
பார்மண்டை சூலையொடு புரைகள்புண்கள்
 பதுங்கிவிடும் வெள்ளியுட மகத்துவந்தான்
ஆரிந்த பற்பத்துக் கனுப்பானங்கேள்
 ஆஆஆ வமுக்கிராகூ ரணந்தானுமே. (35)

தங்க பற்பம்

ஆமிந்தத் தேனிலிடு மண்டலந்தான்
அகலாத நோய்களெல்லா மகன்றுபோகும்
ஓமிந்த தங்கபற்பஞ் சொல்லக்கேளு
உறுதியுள்ள தங்கக்கா சதனைவாங்கித்
தாமிந்தப் பனிதாங்கி மூலிதன்னைச்
சாந்துபோ லரைத்தப்பி யோட்டில்வைத்து
வாமிந்தச் சந்துவாய் சீலைசெய்து
வைத்திடவே கெஜபுடத்திற் பற்பமாச்சே. (36)

ஆச்சிந்தப் பற்பூத்தை யெடுத்துக்கொண்டே
யளவிறந்த வித்தைதனை யாடலாகும்
பாச்சிந்த வகையறிந்து வேதைதன்னை
பாய்ச்சினு லேழரைதான் காணுங்காணும்
வாய்ச்சிந்தச் சொர்ணபற்பம் வியாதிக்கெல்லாம்
வகையறிந்தே யனுப்பான மறிந்துகூட்டு
காச்சிந்த வனுப்பானஞ் சொல்லக்கேளு
கண்டாத்திரி லேகியத்திற் கொண்டிடாயே. (37)

கொண்டாக்காற் சேட்டுமங்கள் தொண்ணூற்றாறுங்
குடிபோகு மென்றுசொல்லிக் கூட்டோடேபோங்
கண்டாக்கால் சயரோகங் காசரோகம்
கபமீளை யுண்மாந்தை கட்டோடேபோம்
உண்டாக்காற் றிரிகடுகு லேகியத்தில்
வுறவுகெட்ட குன்மமொடு மகோதரங்கள்
சென்றாக்கால் வாயுநீ ராம்பல் சூலை
சிரசுநோய் கண்ணோயுந் தீரும்பாரே. (38)

தீருமே குட்டமொடு குறைநோயெல்லாந்
திறமாக லேகியத்திற் கொண்டிட்டாக்கால்
பாருமே சூலையொடு கிரந்திகுஷ்டம்
பறக்குமே தேனி லிருபதுநா ளுண்டாற்
தேருமே நீரிழிவு பிறமேகந்தான்
தெளிவாக சீந்திற்சூ ரணத்திலுண்ண
வாருமே நெல்லிக்காய் லேகியத்தில்
வைத்துமே கொண்டிடவே பித்தம்போமே. (39)

போகுமே சிவவேப்பின் சூரணத்திற்
புகட்டவே புண்புரைகள் சில்விஷங்கள்
ஆகுமே வண்டுகடி விடங்களெல்லா
மாச்சரியம் வேப்பின் சூரணத்திற்கொள்ள
ஏகுமே வாதமென்ற யெண்பதுந்தான்
யெடுத்ததொரு நோய்களெல்லா மேங்கிப்போகும்
வாகுமே யனுப்பானம் அறிந்து செய்தால்
வருகின்ற நோய்தீருஞ் சொர்ணமாமே. (40)

சொர்ணமது தின்றுக்காற் சொர்ணம்போலாஞ்
சுகமாக யிருப்புதின்று லிரும்பு போலாம்
அற்பமா மன்னமுண்டா லழிந்து போகும்
ஆசையது மிகுந்தாக்கால் பிறவிதீரா
வர்னமது தீர்ந்தாக்கால் வலுமைபாழாம்
மாநிலத்தி லிருந்தாக்காற் றவசுபாழாம்
வர்னபொன்னை மறந்தாக்கா லென்னவாகும்
மாகாதிவ்விய மாகப்பொன் னீற்றுவாயே. (41)

கெந்தக பற்பம்.

நீற்றுதற்குப் பின்புமொரு சேதிகேளு
நேராகக் கெந்தகத்தின் பற்பஞ் சொல்வேன்
ஏற்றுகின்ற சிறுசின்னி தனையரைத்தே
யெலுமிச்சங் காயளவாய்க் குகையேசெய்து
தோற்றுகின்ற ரவியதனிற் காயப்போட்டுச்
சுகமாக வுலர்ந்தபின்பு சொல்லக்கேளு
சாற்றுகின்ற கெந்தகத்தின் கட்டிவாங்கித்
தளமான குகைக்குள் வைத்துச் சில்லுபோடே. (42)

சில்லிட்டுச் சீலைசெய்து குக்குடத்திற்
தீர்ந்தாறி யெடுத்துப்பார் ஜெயபற்பந்தான்
மல்லிட்டு வாதாடி வந்தநோய்கள்
மயங்கியே யோடுவதற் கனுப்பானங்கேள்
நெல்லிட்ட நெல்லிடைதான் தேனிற்கொள்ள
நிலையான குஷ்டமொடு குறைநோயெல்லாம்
பல்லிட்டுக் கடித்ததொரு சில்விஷங்கள்
பாரித்த வாய்வோடு வாதம்போமே. (43)

வாதத்தி னாலெழுந்த கிரந்திசூலை
 வயிற்றுவலி நீர்ப்பொருத்த மகோதரங்கள்
சூதத்தால் வந்ததொரு கற்பரோகஞ்
 சுழற்றியே யாற்றிவிடுங் கண்டாற்போலே
பாதத்தில் வீக்கமுள்ள பாண்டுரோகம்
 பறக்குமப்பா பற்பத்தாற் பாருபாரு
தாதுற்ற விடுப்புவலி சந்துவாதந்
 தசையிலுள்ள நீரெல்லா மற்றுப்போமே. (44)

மண்டூரபற்பம்.

அத்ததொரு மண்டூர பற்பஞ் சொல்வேன்
 அதிகமாஞ் சொரிகணங்கை யரைத்துப்பூசி
வைத்திடவே மண்குகையில் சில்லுப்போட்டு
 வளமாக சீலையொன்று வாயில்செய்து
பத்தியுடன் கெஜபுடத்திற் கூகை நீரின்
 பரிவதுபோல் கண்மணியே நீறிப்போகும்
புத்தியுட னிதையெடுத்து வைத்துக்கொண்டு
 புணிதமாய்த் தேனதிலே புசித்துப்பாரே, (45)

புசித்திடவே பணவிடைதான் றேனிற்கொள்ளப்
 பொருமுகின்ற பாண்டுவகை பொல்லாவீக்கம்
நசித்திடவே பண்ணுவிக்கு மண்டூரந்தான்
 நாடாது மந்தார காசரோகம்
மூசித்திட்ட விஷப்பாகம் விஷநீரெல்லாம்
 மூட்டோடே பிடுங்கிவிடு மூர்க்கமெத்த
உசித்திட்ட வஞ்சனக்கல் பற்பஞ்சொல்வே
 னெருபிடியாஞ் சிறுகீரை குகையைப்பண்ணே. (46)

அஞ்சனக்கல் பற்பம்.

பண்ணியந்த வஞ்சனக்கல் நிறையவிட்டுப்
 பரிவான மூலிகையை யரைத்துமூடி
ஒண்ணியமண் சீலைசெய்து கெஜபுடத்தி
 லுறுதியுள்ள சங்கதுபோல் நீறிப்போகுந்

தண்ணியிலே போட்டவுடன் மிதக்கும்பாரே
சலமான மேகவகை யிருபதுக்கும்
எண்ணியே தேனிலிடு வியாதியானல்
யென்ன சொல்வேன் நீர்போன போக்குத்தானே.

தாளக பற்பம்.

போக்கான தாளகத்தி னீற்றைச் சொல்வேன்
புதியதலை யோடதனைப் பொடித்துக்கொண்டு
நீக்கான சுண்ணும்புத் தண்ணீர்விட்டு
நினைவாகத் தானரைத்துக் குகைபோற்பண்ணி
வாக்கான மேல்மூடி யொன்றுசெய்து
வண்ணமாய்க் காயவைத்தே யதனுட்கேளு
பாக்கான தாளகத்தின் கட்டிவைத்துப்
பரிவாகச் சீலைமண் செய்துலர்த்தே (48)

உலர்ந்தபின்பு குக்குடத்தில் நீறிப்போகும்
வுத்தமனே தாளகத்துக் கொப்புமுண்டோ
மலர்ந்ததொரு மல்லிகைப்பூ போலாம்வெள்ளை
மாசற்ற நீறதனை வைத்துக்கொண்டே
அலர்ந்தமலர்த் தேனதிலே கொள்வீராகில்
அரிதான சயரோக மந்தாரங்கள்
கலந்தகப முள்மாந்தை யிருமலிளை
கரைகடந்தே யோடிப்போங் கண்டுகொள்ளே. (49)

கண்டுகொண்டே யனுப்பான மறிந்துசெய்தாற்
காணுத கடிவிஷமுங் குறைநோய் குஷ்டம்
வண்டுகடி யெலிவிஷங்க லெல்லாந்தீரும்
மைந்தனே யனுப்பான மறிந்துபோடு
பண்டான ஜாதிலிங்கந் தன்னை நாளும்
பற்பமாய் நீறுகிற பாண்மைபாரு
எண்டிசையி லுள்ளவரால் நீற்றப்போமோ
யெவருமெய்க்கப் பற்பமதைச் செய்யக்கேளே. (50)

ஜாதிலிங்க பற்பம்.

செய்யதொரு ஜாதிலிங்கக் கட்டிவாங்கிச்
சிவமூலி வேர்ப்பட்டை குகையாய்ச்செய்து
வெய்யதொரு கட்டியதில் வைத்துமூடி
விதமுடனே சந்துவாய் சீலைசெய்து
பையவே குக்குடத்தில் நீறிப்போகும்
பரிவுடனே நிறுத்துப்பா ரிடைதான்போகா
துய்யவே நோயெல்லாந் தீரவென்றுற்
துறையான வனுப்பான மொன்றுகேளே. (51)

வேறு.

ஒன்றுதான் தேனிற் கொள்ள
வுறுதியாங் குன்ம வாய்வு
பண்டுள்ள ஜன்னி வாதம்
பாரிச வாய்வு சூலை
என்றிடு மீளை தன்னை
டிளைப்பதும் விரைந்து போகும்
உண்டிடு மனுப் பானங்கள்
உகந்துமே கண்டிடாயே. (52)

வீர பற்பம்.

உகந்திடும் வீர பற்பம்
வுரைக்கிறே னுறுதியாக
ஜெகந்தனி லப்பை யின்றன்
கிழங்கினைக் குகைபோற் செய்தே
இகந்தனில் வீரந் தன்னை
யிசையவே யதனுள் வைத்துப்
பகர்திடுஞ் சில்லு மூடிப்
பாகமாய்ச் சீலை செய்யே. (53)

செய்யவே குக்கு டத்தில்
தீர்க்கமாய் நீறிப் போகும்
மெய்யது பணவிடைதான்
மியல்புடன் றேனிற் கொள்ள

மையது சூலை குன்ம
மகன்றிடும் வாய்வு போகும்
மெய்யிது சொன்னேன் காரப்
போக்கினை விரைந்து கேளே. (54)

## பொரிக்காரப் பற்பம்.

விரைந்திடும் பொரிக் காரத்தின்
கட்டியை விதித்து வாங்கி
உரைந்திடுஞ் சங்கை நீற்றி
யுகந்துநீர் விட்ட ரைத்து
நிறைந்திடுங் குகையாய்ப் பண்ணி
நேர்பொரிக் காரம் வைத்துக்
குறைந்திடுஞ் சீலை செய்து
குக்குடம் வைத்தி டாயே. (55)

வைத்திடக் காரம் நீறும்
வளமிதற் கனுப்பா னங்கேள்
நித்தமுந் தேனிற் கொள்ள
நீர்க்கடுப் புடனே மாறும்
மெத்தன ஜலமி ரங்கும்
மிசைந்தகல் லடைப்புந் தீரும்
துத்திடுஞ் சதை யடைப்புத்
திறந்து நீர்த் தோஷம் போமே. (56)

## சாஸ்திர பேதி பற்பம்.

போமென சாவ்ஸ்திர பேதி
புகல்கிறேன் புனித மாக
வாமென மூலைப்பால் விட்டே
யவ்விடை யெருக்கம் பாலால்
ஆமென நாலு ஜாமம்
மதித்தரைத் துண்டை செய்து
நாமென குக்கு டத்தில்
நாட்டிட் நல்ல நீறே (57)

நல்லதோ ரந்நீறு தன்னை
நாட்டுவா யிஞ்சிச் சாற்றில்
வல்லதோர் சுரமுந் தீரும்
மருவிய பாலிற் கொள்ள
மெல்லவே வருஞ் சுரங்கள்
விலகியே பின்னும் போகும்
அல்லதோ ருஷ்ண மெல்லாம்
அலரிடும் வெண்மை தானே. (58)

### வெண்குந்திரிக்க பற்பம்.

வெண்மை குந்திரிக்கம் நீற்றை
விளம்புவேன் விரைந்து கேளு
பண்ணியின் பாலை விட்டு
பரிந்தரைத் துண்டை செய்தே
அண்ணலே யோட்டில் வைத்து
யதின்மேலே யோடு மூடி
மண்ணது சீலை சுற்றி
வைப்பாய் குக்குடத்திற் றானே. (59)

குக்குடந் தன்னிற் றானே
கூகைநீ றெப்ப தாகும்
மிக்கநீ றதனை வெண்ணெய்
தன்னிலே யருந்து வீரேல்
தக்கபற் கடுப்பு ரத்தந்
தானது பறந்து போகுஞ்
சிக்குள்ள புண்ணுந் தீருஞ்
சிந்தையி லெண்ணிப் போடே. (60)

போடவே பல்லு னோவும்
புண்ணெனு மனைத்தி னோவுஞ்
சூடது கொண்ட புண்ணுஞ்
சூலையின் ரணங்கள் போகும்

ஆடிடுந் தந்த மெல்லாம்
 ஆணிபோ லுறுத்து நிற்கும்
சேடு வெண் குந்திரிக்கஞ்
 செய்திடுந் திறங்க டானே. (61)

பவழபற்பம்.

திறந்திடும் பவழ பற்பம்
 செய்கிற திறந்தான் கேளு
சிறந்ததோர் மூயலின் ரத்தந்
 திர்க்கமாய் விட்டே யாட்டிக்
குறைந்திடா வில்லை செய்து
 குலாவியே யோட்டில் வைத்து
மறைந்திட வோடு மூடி
 வைப்பாய்குக் குடத்திற் ருனே. (62)

தானது நீறி வெள்ளைச்
 சதுர்முகன் போலே யாகும்
பானதோர் நீற தன்னைப்
 பணவிடை யனுப்பா னங்கேள்
தோனமாந் தேனி னேடு
 துதுளை நீரிற் கொள்ள
மானமாங் கபங்க ளிலை
 சயங்களு மகன்று பேரமே. (63)

அகன்றிடு மிருமற் காச
 மதிகமாம் பவழ பற்பம்
புகன்றிடப் போகு மப்பா
 புனிதமா மிந்த நீற்றைச்
செகந்தனிற் செய்ய மாட்டார்
 செப்பினே னுலகத் தோர்க்கு
திகண்டது போலாம் றாலை
 நுணுக்கமாய் நிகழ்த்தி னேனே. (64)

நிகழ்த்தினே நுணுக்க மாக
நினைவொடு பவழ பற்பஞ்
செகத்தினி லாருங் காணுர்
செப்பினேன் சூட்ச மாக
அகத்தினி லிருந்து கொண்டே
யாடலாங் கோடி வித்தை
மகத்துவ மின் னூல் போல
வைத்தியங் கண்டி லேனே. (65)

வைர பற்பம்.

கண்டதோர் வைரந் தன்னைக்
கருத்துட னுரைக்கக் கேளு
பெண்களின் சுரோணி தத்தைப்
பேணிவார்த் தரைத்து வில்லை
நன்றதாய்ச் செய்து லர்த்தி
நாடியே யோட்டில் மூடி
சென்றிடக் கெஜ புடத்தில்
தீர்க்கமாய்ப் பற்ப மாமே (66)

நீறிய பற்பந் தன்னை
நினைவதாய் தேனிற் கொள்ள
ஊறிடுந் தேக மெல்லா
மூத்ததோர் வைரம் போலம்
மாறிடு மேனி யெங்கும்
வச்சிர காய மாகுங்
கூறிடும் ரத்ன மெல்லாங்
கட்டியாய் நீற்றக் கேளே. (67)

இரத்ன பற்பம்.

கேளது பவழப் புத்தைக்
கிளர்முன்போ லரைத் துக் கொண்டே
ஆளது குகையாய்ப் பண்ணி
யதினுள்ளே வைரம் வைத்துச்

சூளது சில்லு போட்டுச்
சுற்றியே சீலை கட்டி
நாளது குக்கு டத்தில்
தாட்டிடப் பற்ப மாமே. (68)

போமது பற்ப மானல்
புவியினிற் காட்ட வொண்ணு
ஆமதி ரத்ன பற்பம்
அதிகமாய்ச் சித்தர் செய்வார்
நாமது திறந்து சொன்னேம்
நாட்டினில் மனுவோர்க் காக
ஆமிதுக் கனுப்பா னங்க
ளறிந்திட வுறுதி யாமே. (69)

உறுதியா மிந்த நீற்று
லொழிந்திடும் வியாதி யெல்லாம்
திறுதியாம் பாஷாணத்தி
னீரதை யறையக் கேளு
சுருதியா மண்டத் தோட்டைச்
சுண்ணமா யூதிக் கொண்டு
கருதியே குகையாய்ச் செய்து
கட்டியைப் பேணி வையே. (70)

பாஷாண பற்பம்.

பேணியே வைத்தபின்பு
வெள்ளெருக் கதனின் பாலை
ஆணியாம் பாலை விட்டே
யதின்மேலே சில்லுப் போட்டுப்
பூணியே சீலை செய்து
குக்குடம் புடம தாக
வாணியே யிடுவா யானல்
மாசற்ற பற்ப மாமே. (71)

பற்பத்தி னிடையே சூதம்
பாய்ச்சியே மூலைப்பால் விட்டு
நற்புட னரைத்துப் பில்லை
ஞயம்பட வுலர்த்திக் கொண்டே
உற்பன வோட்டில் வைத்தே
யுபாயமாய்ச் சீலை செய்து
கற்பகக் களிற்றைப் போற்றிக்
குக்குடங் கருதிக் கொள்ளே. (72)

கொள்வது நீற்றை நன்றாய்க்
கூறுவேன் வெள்ளீ யத்தில்
விள்வது பதந்த னக்குப்
பணவிடை வீத மாக
உள்வது உருகும் போது
கொடுத்திட வுரிந்து கொள்ளும்
மெள்வது துய்ய ரூபாய்
விலையதற் கதிகந் தானே. (73)

தானென சுரத்துக் கெல்லாம்
பாலினிற் றூக்கி ஞக்கால்
கூனென நாழி கைக்குள்
குளிர்சுர மோடிப் போகும்
நானென வித்த நீற்றை
நாட்டினி லுரைக் கொணுது
பானெனத் தெளிந்த நூலைப்
பத்திரப் படுத்தி வையே. (74)

சார பற்பம்.

வைத்திடுஞ் சார நீற்றை
மைந்தனே மகிழ்ந்து கேளாய்
எத்திடும் புளியஞ் சாம்பல்
யெடுத்ததை யுப்பாய்க் காய்ச்சி
சத்திடுங் குப்பை மேனிச்
சாறுவிட் டரைத்து நன்றாய்
அத்திடும் குகையுண் டாக்கி
யதினுள்ளே வைத்து மூடே. (75)

மூடியு மதனுற் செய்து
மூசியவே சீலை கட்டி
யாடிடக் குக்குடத்தில்
அழகதாம் நீறும் பற்பம்
தேடினுற் கிடையா திந்தச்
செகந்தனிற் சார பற்பம்
வாடிடும் வாதியே கேள்
வகையுட னீற்று வாயே. (76)

வாயது பேசினுக் கால்
வாய்க்குமோ சார நீறு
நோயது கொண்ட வாதி
சாரத்தி னு ணுக்கங் கேளு
காயது நாகந் தானுங்
கண்டிறந் தாடிச் சாகும்
பேயது கொண்ட வாதி
பேசாதே பேணிப் பாரே. (77)

பாருள்ள நோய்கள் தீரப்
பாய்ச்சிடு தேனி லேதான்
சீருள்ள மகோ தரங்கள்
வாயுவின் றிரட்சி யோடு
நீருள்ள வாம்பல் வீக்கம்
நிச்சயங் கற்ப ரோகம்
மூருள்ள குன்ம மெல்லாம்
மோடிடு மூலகத் தோர்க்கே. (78)

உப்புப் பற்பம்.

உலகத்தி லுப்பி னீற்றை
யுரைக்கிறே னுறுதி யாகச்
செலம்பெற்ற லவண ந் தன்னைச்
சிவந்த வோர் கட்டி வாங்கி
மலைபெற்ற வன்னிப் பட்டை
யிடித்ததை மாவ தாக்கி
நிலைபெற்ற வோட் டிலிட்டு
நேர்ந்துப்பை நடுவே வையே. (79)

வைத்ததோர் கட்டி மேலே
வன்னிதன் பட்டைத் தூளை
உத்ததோர் கீழ்மே லிட்டே
யோட்டின்மே லோடு மூடி
முத்தவே சீலை செய்து
மூன்புடங் கோழி யிட்டே
அத்தபின் னெடுத்துப் பார்க்க
வதிகமாம் பற்ப மாமே. (80)

அதிகமாம் பற்பந் தன்னை
யருந்திடத் திசைவாய் வெல்லாம்
பதியைவிட் டோடிப் போகும்
பாரிச வாய்வு சூலை
கதிகெட்ட மகோத ரங்கள்
கனத்திடும் நீர்த்தோ ஷங்கள்
மதிகெட்டுக் கடலே புக்கும்
மகிழ்வதற் கின்ன முண்டோ. (81)

உண்டென வுரைத்த செய்தி
யுறுதியாய்ச் சொல்லக் கேண்மின்
அண்டர்கள் போலா மிந்த
வதிசய முப்பு நீறும்
தெண்டிசை முழுதும் வாழச்
செப்பினேன் பற்பந் தன்னைக்
கண்டிட வெள்ளி செம்பிற்
களஞ்சதற் கொருமா வீயே. (82)

ஈந்திட வயதைந் தாகு
மெடுத்திட வாணிக் கெல்லாம்
தேய்ந்திட வறுத்தா யாணுற்
றெளிந்திடுந் தங்க மாகுங்
காய்ந்திடுங் கசட ருக்குக்
காட்டாம விந்த நூலை
ஆய்ந்திடும் பெரியோர்க் கீய்ந்தா
லறம்வரு மதிக மாமே. (83)

## ஆமையோட்டின் பற்பம்

ஆமையோ டதனை நீற்ற
வருடனைச் சொல்லக் கேளு
பூமிவேர் தனைய ரைத்துப்
பொருந்திடக் கவசஞ் செய்தே
ஆமிதை யதனுள் வைத்தே
யழகதாய்ச் சில்லுப் போட்டு
தாமுமே குக்கு டத்திற்
றுங்கிடத் தவள நீறே. (84)

தவளமாய் நீற்ற லான
சகஸ்திர பிரா்ணி பற்பம்
கவளமாய்த் தேனி லிட்டாற்
கண்கணைய்த் தொண் ணூற் றுறு
மூவளமா யோடிப் போகு
முசலகண் ரோகந் தீரும்
பவளமா மிந்தப் பற்பம்
பார்தனி லதிகந் தானே. (85)

## முத்துப் பற்பம்.

தானெனு முத்து நீற்றைச்
சாற்றுவேன் தரணி யோர்க்கு
மானெனு மண்ட நீரால்
மகிழ்ந்தரைத் துண்டை செய்து
நானென வோட்டில் வைத்து
நாடியே சீலை மூடி
வானென குக்கு டத்தில்
வைத்திடச் சுண்ண மாமே. (86)

சுண்ணமா முத்து நீற்றைச்
சுகமாய்வெற் றிலையிற் பூசி
அன்னவே தாம்பூ லத்தில்
அருந்திட வாய்வு போகும்

முன்னமே பல்லி றுகுஞ்
சிலேற்பன முழுதுந் தீரும்
வன்னமாந் தேகத் துக்கு
வாய்த்திடுஞ் சுண்ண மாமே. (87)

வாய்த்திடும் பிறமே கங்கள்
வந்தநீ ரழிவு தீருஞ்
சாய்த்திடுங் கற்பூ ரத்தைச்
சாற்றுவேன் சுண்ண மாக்க
வாய்த்தகற் பூர வள்ளிச்
சாரது வார்த்த ரைத்துத்
தோய்த்திடும் வட்ட தாக்கி
ரவியினிற் காயச் சொல்லே. (88)

சொல்லிய வட்ட வோட்டில்
துலங்கவைத் தோடு மூடி
நல்லதோர் சீலே செய்து
நாட்டியே புடந்தான் கோழி
எல்லியே யெடுத்துப் பார்த்தால்
யியல்புள்ள சுண்ண மாகும்
வல்லிவெற் றிலேயிற் றின்றால்
வச்சிர காய மாமே. (89)

காயமும் வலுத்துப் போகுங்
கசடது மற்றுப் போகும்
வாயினில் ரோகந் தீரும்
வருந்திய கபமு மேகும்
மாயமாம் வாய்வு போகும்
மலசலக் கட்டுந் தீரும்
நேயமாய்க் கண்டு லங்கும்
நிச்சய மிதுசொன் னேனே. (90)

துரிசு பற்பம்.

நிச்சய மாகச் சொல்வேன்
நீலமாந் துரிசுப் போக்கு
வைச்சதோர் வங்கத் தோடே
யிடைக்கிடை சூதம் வார்த்து
மெச்சுமந் திடைக்கு நல்ல
வெடி யுப்புங் கூடக்கூட்டி
உச்சவாய் நீரி னாலே
யுறவரைத் துலர்த்தி வட்டாய் (91)

வட்டமா யோட்டில் வைத்து
வளையவே சீலை செய்து
திட்டமாய்க் குக்கு டந்தான்
தீர்த்திடச் சுண்ண மாகும்
முட்டவே சிவந்து போனால்
முறைப்படி யுப்பைக் கூட்டிச்
சட்டமா யறைத்து முன்போல்
புடமிடச் சுண்ண மாமே. (92)

சுண்ணத்தை வாய்நீ ராலே
சுழற்றியே யறைத்துக் கொண்டே
அன்னத்தை துரிசுக் கட்டிக்
அப்பியே ரவியிற் போட
முன்னொத்த மூன்று நாளில்
முழுவெள்ளை யாகும் பாரு
பொன்னொத்த சீலை செய்து
போட்டிடு காடை யொன்றே. (93)

ஒன்றிதை யொத்துப் பார்க்க
வியலுள்ள சுண்ண மாகுங்
கண்களாற் கண்ட பேர்க்குங்
கலியெலாம் நீங்கிப் போகும்

பண்டிதை ரசத்திற் குக்கால்
பணவிடை தாக்கி னுக்கால்
உண்டது கொண்டு போமோ
உறுதியாம் வாய்நீ ராலே. (94)

வாயினி லுமிழ்நீ ராலே
மத்தித்தே யுருட்டி மெள்ள
காயினி லுமியோட் டுள்ளே
கரியினி லுருக்கிக் கொண்டு
வாயினீ லாயி பாதந்
தன்னையே வணங்கி நித்தங்
காயினி லிதனைக் கொண்டே
யாடலாங் கோடி காணே. (95)

கோடியென் றுரைத்தேன் கேளாய்
கோடியு மிதற்குள் ளாகும்
வாடியே மயங்க வேண்டாம்
வைத்திடு துரிசுச் சுண்ணந்
தேடினுற் கிடையா தப்பா
தெருவெல்லாங் கிடைக்குமோ சொல்
பாடியும் படித்து மென்ன
பாரினிற் றூற்கிட் டாதே. (96)

கிட்டாமற் போன தேதோ
கிடைத்தவர் கொடுக்க மாட்டார்
நட்டாகத் தந்த பேர்கள்
நரகினில் விழுந்து போவார்
கொட்டாக விருப்பா ராளுல்
திரவிய மிகவுஞ் சேரும்
முட்டாளாய்ப் போகாமற் றுன்
முறையதாய்க் குருவை வாங்கே. (97)

### பொன்னிமிளை பற்பம்.

வாங்கும்பொன் னிமிளை பற்பம்
வளமதாய்ச் சொல்லக் கேளு
கோங்கிய வரசன் பட்டை
தூளதா யிடித்துக் கொண்டு
காங்கிதை கீழ்மே லிட்டுக்
கட்டியை நடுவே தூக்கி
ஓங்கியே யோட்டில் வைத்தே
யதன்மேலே யோடு மூடே. (98)

மூடியே சீலைசெய்து
மூக்யமாய் கெஜபு டத்திற்
சாடியே நீறிப் போகுந்
தவளம்போல் வெண்மை யாகுங்
கூடிய வாய்வு ரோகங்
குலைகுலைந் தோடிப் போகும்
நீடிய குன்ம மெட்டும்
நிலைகுலைந் தேகுங் காணே. (99)

காணவே சூலைக் கட்டு
கண்டவிப் புருதி மாலை
ஊணரை யாப்பு புத்துக்
கோகோநெய் தேனிற் கொள்ளு
தோணவே தங்க நீற்றைச்
சுளுவாக வொன்று சொல்வேன்
நாணவே சூரி வித்தை
நாவினி லுமிழ்நீ ராலே. (100)

### தங்கபற்பம்.

நீரினு லரைத்துத் தங்கக்
காசுமே நிருத்தி யோட்டில்
தாரியே வைத்து மூடிச்
சந்துவாய் சீலை செய்தே

ஊறினற் கெஜபு டத்தில்
உயர்த்தியாய் நீறிப் போகும்
பேரீனு லிந்த நீற்றைப்
பேசொணு தரிந்த பேர்க்கே. (101)

பேர்க்கென்ற வகையேது சொல்லக்கேளு
பெயர்கெட்ட வுலகுக்குப் பொருளேகாணும்
மாக்கென்ற தங்கபற்ப மொருமாவாக
வப்பனே ரவிமதியி லீய்ந்தாயானல்
ஊக்கென்ற விராகனுக்கே யதிகங்காணும்
வுறப்புள்ள தங்கமடா யிந்தப்போக்கு
நாக்கென்ற சரசோதி நிருத்தஞ்செய்வாள்
நாதாக்கள் செய்கின்ற வித்தைதானே. (102)

வித்தையென்ற வித்தையெல்லா மிருநூற்றுள்ளே
விருதுகட்டி வெட்டுதற்குச் சுளிவுமெத்த
சுத்தென்ற சுத்தெல்லாம் விட்டுப்போட்டுச்
சுளுவான வித்தைதனை யாடித்தேறு
பத்தென்ற நூறுமது முடிந்தவாறைப்
பாடினே னின்னமொரு நூறும்பாரு
மூத்தென்ற முத்துபோல் மூலிப்போக்கு
முக்கியமா யோதுகிறேன் முறையைப்பாரே. (103)

முறையான ஏகமூ லிகையினலே
முக்கியமா யெண்ணெய்யெடு நெய்க்கியாழந்
துறையான துறையெல்லா மிதற்குட்சொன்னேன்
சுளுவாகத் தைலங்கள் சூரணங்கள்
பறையென்ற பறைபோட்டேன் வியாதிக்கெல்லாம்
பண்பதுபோற் றுலக்கிவிட்டேன் பலநூலுள்ளே
நிறையான துறையெல்லா மிதிலேசொன்னேன்
நிச்சயமாய் நூற்றுக்கு ணிகர்காணேனே. (104)

## தைலக் காண்டம்.

### மேகத்துக்குத் தைலம்.

நிகரில்லா மேகத்தின் தைலங்கேளு
நிசமான சந்தனமு மிலாமிச்யோடு
வகையாக வாவிரையின் பட்டைதானும்
வளமாகப் பலம்பத்து நிறுத்துத்தூக்கிப்
புகையாமற் றூணிநீ ரெட்டொன்றாக்கிப்
புகழ்பெறவே கியாழத்தை யிறுத்துக்கொண்டு
தகையாமல் யெள்ளெண்ணெய் நாழிவிட்டு
நரிகிண்டி வேர்பலந்தா னரைத்துப்போடே. (105)

போட்டதனைக் காய்ச்சியே மெழுகதானற்
புண்ணியனே வடித்திட்டுப் புகலக்கேளு
நாட்டினிலே முழுகிவா மேகந்தீரும்
தளினமாந் திரேகமூமே யிருகிப்போகும்
பூட்டென்ற மேகநீர் போகவேண்டிப்
புனிதமா மருந்தொன்று சொல்வேன்மைந்தா
சாட்டதனை முன்சொன்ன பற்பந்தன்னிற்
சார்வாகக் கொடுத்துவிடு சாந்தமாமே, (106)

### வில்வவேர்த் தைலம்.

சாந்தமாம் வில்வவேர்த் தைலங்கேளு
தானான வில்வவேர் பலந்தான்பத்து
பாந்தமா யிடித்ததனைப் பதக்குநீரிற்
பக்குவமாய்க் காய்ச்சியே யெட்டொன்றாக்கிப்
போந்தெண்ணெய் நாழியிலே பலந்தான்தந்தம்
புகழாகக் கியாழத்தி லரைத்துப்போட்டுச்
சேர்ந்ததோர் தைலமது மெழுகதானற்
சிறப்பாக முழுகிவர வளமைகேளே. (107)

வளமையுடன் முழுகிவாப் பித்தம்போகும்
வரிசைபெற்ற மெய்யிலுள்ள உஷ்ணமேகும்
யிளமைபெற வாக்கிவைக்கு மேகம்போகு
மிருகண்ணுந் தெளிவுதரு மிருமல்தீரும்

உளமதனிற் பித்தமெல்லா மோடிப்போகும்
முள்வளர்ச்சி யுட்கரங்க ளொழிந்துபோகுந்
தளமாகச் சூட்சமாந் தைலஞ்சொன்னேன்
தளராமற் பாருநீ தரணியோர்க்கே (108)

வேங்கைத் தைலம்.

தரணியுள்ள மானிடர்கள் பிழைக்கவேண்டிச்
சாற்றுகிறேன் வேங்கையது தைலந்தன்னைக்
காணியமாய்ப் பலம்பத்துத் தூக்கிக்கொண்டு
காய்ச்சியிடு தூணிநீ ரெட்டொன்றாக
திரணியுள்ள கியாழத்தை வடித்துவாங்கித்
திறமான விலாமிச்சுப் பலமொன்றாக
வாணியமாய்க் குடிநீரி லரைத்துப் போட்டு
வளமாக மெழுகுபத மானவாறே. (109)

வாறாக மூழ்கிவா வகையைக்கேளு
வாதமொடு சூலைகளும் மாண்டுபோகும்
பேறாகப் பித்தமெல்லாம் நடுங்கியோடும்
பீனிசமு மண்டையிடி பிரட்டற்சத்தி
வீறான விக்கல்மூத லுடனேபோகும்
மெய்யெல்லாங் காந்தியுண்டாம் விழிரோகம்போம்
நூறாகும் பின்சொன்ன தைலப்போக்கு
நுணுக்கமாம் பற்பத்தின் போக்குநூறே. (110)

வெட்டிவேர்த் தைலம்.

போக்கான சேதியொன்று சொல்லக்கேளு
புகழான வெட்டிவேர் பலந்தான்பத்து
நோக்காக விடித்ததனைப் பதக்குநீரில்
நுணுக்கமாய்க் காய்ச்சியே யெட்டொன்றாக்கி
வாக்காக வடித்ததனி லெண்ணெய்நாழி
வளமையா யதிமதுரம் பலந்தானென்று
தாக்கான யெண்ணெய்க்கு ளரைத்துப்போட்டுச்
சாதகமாய் மெழுகுபதந் தன்னில் வாங்கே. (111)

வாங்கியே மூழுகிவா வரிசைகேளு
மானிலத்தில் மனிதர்கட்கு மண்டைச்சூலே
ஓங்கியே குஷ்டமொடு பிறநீர்க்கோர்வை
யொளிமருளுங் கண்புகைச்சற் காதுமந்தம்
ஏங்கியே யிளைப்பிளைப்பு மேற்கால்நோயும்
மியல்கெட்ட தாதுசய மெரித்தற்காந்தல்
நீங்கியே போவதற்கோர் மண்டலந்தான்
நேராக ஒன்றைவிட்டே ஒருநாளென்னே. (112)

வேம்பின்பட்டை தைலம்.

என்னவென்ற இன்னமொரு தைலங்கேளாய்
இனிதான வேம்பினுட பட்டைவாங்கி
உன்னவென்று கால்துலா மிடித்துக்கொண்டே
யொருதூணி நீரதுதான் வார்த்துக்காய்ச்சி
சொன்னதென்ன யெட்டொன்று யிறுத்துமெள்ளச்
சுருதிபெற யெண்ணெய்யிரு நாழிவிட்டு
நன்னயமாய் யேலமதில் பலமிரண்டு
நலமான கியாழத்தி லரைத்துப்போடே. (113)

அரைத்துடனே காய்ச்சிவிடு மெழுகதானல்
ஆற்றியே வடித்ததனை முழுகும்போது
நிரைத்திட்ட வாதமெல்லா மேங்கியோடும்
நிசமான சூலையொடு குஷ்டரோகந்
திரைத்திட்ட நீரிழிவு மேல்கடுப்புச்
செங்கரப்பான் புண்புறைகள் சிதறிப் போகும்
உரைத்திட்ட தைலத்தி லுறுதிமெத்த
வுத்தமனே வேறொன்றை யுறைக்கிறேனே (114)

குறுங்தோட்டித் தைலம்.

உரைக்கிறேன் குருந்தொட்டி வேரைமைந்தா
வோர்நிறையாங் கால்துலா மிடித்துப்போட்டு
நிரைக்கிறேன் றூணிநீ ரெட்டொன்றுக்கி
நேராக யெண்ணெய்யிரு நாழிவிட்டு

கரைக்கிறேன் கியாழத்தா லரைத்துமைப்போற்
 கசகசா விருபலந்தான் கண்டுகொள்ளு
நரைக்கிறே னெண்பதென்ற வாதமெல்லாம்
 நடுநடுங்கி யோடுமடா நயந்துகாணே. (115)

கோடுவேலி வேர்த்தைலம்.

நயமான கொடுவேலி பலந்தான்பத்து
 நன்றாக இடித்திட்டுப் பதக்குநீரில்
வயமாக வற்றக்காய்ந் தெட்டொன்றாக்கி
 வளமான நல்லெண்ணெய் நாழிவிட்டு
நியமாக புன்னைக்காய் வெண்ணெய்கூட்டி
 நிலையான சீரகமும் பலந்தானென்று
ஜெயம்பெறவே யரைத்ததனைப் பாகிற்சேர்த்துச்
 சீரான மெழுகுபத மானவாறே. (116)

ஆனதயி லவ்வடித்து முழுகும்போது
 யானந்த வாயுவினோ டனந்தம்வாய்வுந்
தேனமருங் குழலாள்தன் வாதத்தோடும்
 சிடிசொரியுந் தினவுமுதற் சிரங்குகுட்டம்
போனதென்ன வரையாப்புக் கிரந்திசூலை
 புண்புரைக ளோடுபொடி பிளவைவீக்கம்
தானெனவே வந்தநோய் பலவுந்தீரும்
 நல்லதொரு தைலமது நாடிப்பாரே. (117)

சீரகத்தைலம்.

பாரப்பா சீரகந்தான் படியோரெண்டு
 பதமாக விடித்துநீர் பதக்குவார்த்துச்
சீரப்பா யெட்டொன்றாய்க் கியாழம்வாங்கித்
 தெளிவாக யெள்ளெண்ணெய் படிதான்வாரு
காருறையுங் கார்போகி பலமிரண்டு
 கியாழத்தா லரைத்ததனைக் கலக்கிச்சேர்த்தே
ஏறவே மெழுகுபத மாயிறக்கி
 யியல்பாக முழுகிவரக் குணத்தைக்கேளே (118)

குணமென்ன குன்மமெட்டும் வாய்வுபத்துங்
குட்டமொடு தழுதணையுங் குண்டவாய்வும்
மணமென்ன வாந்திபித்தங் கிறுகிறுப்பும்
வாயுவினல் வந்ததொரு சோகைபாண்டும்
கணமென்ன வுஷ்ணரோ கங்களும்போம்
கபாலத்திற் சூடுகப நீர்க்கட்டும்போம்
பணமென்ன நோய்தீரா மருந்துமுண்டோ
பார்தனிலே மூளைத்தழு லிகைக்குட்பாரே. (119)

மூலிகைக்குள் வெகுமூலி சஞ்சீவியப்பா
மூளைத்துதே மலைதோறுங் குவடுதோறுஞ்
சாலவே வெகுநூடு நாட்டிற்குள்ளே
சாதகத்தை யறியார்கள் சண்டிமாந்தர்
ஆலவே வைத்தியன்றன் குணத்தைக் காணன்
ஆண்மையினல் வயிற்பிழைக்க வலைவான்மட்டை
சோலியென்ன மன துவைக்க வேண்டாஞ்சொன்னேன்
துறையான திருநூற்றின் றுறையைப்பாரே. (120)

சூரிவித்துத் தைலம்.

நூற்றிலே யின்னமொரு தைலங்கேளு
நுணுக்கமுள்ள சூரிவித்து துலாந்தான்காலே
ஏற்றியே யிடித்துநீர் பதக்கிற்கொட்டி
யெட்டொன்று யொருவிறகால் வற்றக்காய்ச்சிப்
போற்றியே வடித்ததனி லெண்ணெய்நாழி
போதவிட்டுக் கற்கவகை சாற்றக்கேண்மின்
சூற்றியே யறுமாதக் காடிநாழி
சுக்கதிலே யொருபலந்தா னரைத்துச்சூட்டே. (121)

சூட்டியபின் பதமெழுகா யிறக்கிக்கொண்டு
தோன்றவே முழுகிவர மண்டலந்தான்
ஓட்டிவிடுங் கிரந்திகுட்டஞ் சூலைகுன்மம்
மூண்டுவிடுங் கிராணியெல்லா முள்மூலத்தை

வாட்டிவிடுஞ் சூடுமுதல் வாங்கிப்போகும்
மைந்தனே மலக்கட்டு மயங்கியேகுந்
தாட்டிகமாய் தீர்த்துவிடுந் தைலப்போக்கு
சஞ்சீவி யொப்பென்னச் சாற்றினேனே. (122)

கீழ்க்காய் நெல்லித் தைலம்.

சாற்றவகை யின்னங்கேள் கீழ்க்காய்நெல்லி
சமூலமாய் காற்றுலா மிடித்துக்கொண்டே
ஆற்றுநீ ரதுவிட்டுக் கியாழஞ்செய்தே
யப்பனே யெட்டொன்ருய்க் காய்ச்சிவாங்கி
மாற்றிடுவா யெள்ளெண்ணெய் படிதான்ரெண்டு
வளமான சருக்கரையும் பலமோரைந்து
ஏற்றியே கர்க்கமிட்டு மெழுகதானல்
இயல்பாக முழுகிவாத் தீரும்நோய்கேள் (123)

கேளடா பித்தமென்ற தெல்லாந்திரும்
கிறுகிறுப்புத் தலைச்சுழற்றல் வாய்நீருரல்
நாளடா ரத்தபித்தம் வெருத்தபித்தம்
நலமான விளைப்பிறைப்புப் பித்தரோகஞ்
சூளடா மஞ்சள்நீ ரீரத்தமூத்ரஞ்
சூடுமூத வுஷ்ணங்கள் பலவும்போகும்
வேளடா மேலெரிவு கைகாற்காந்தல்
வெழுத்தமயிர் கருப்பாகும் விதத்தைப்பாரே (124)

சங்கம்வேர்த் தைலம்.

விதமாகச் சங்கம்வே ரதனைத் தோண்டி
வெட்டிவந்து காற்றுலா மிடித்துப்போட்டு
பதமாகத் தூணிசல மெட்டொன்ருக்கிப்
பாரதிலே யெள்ளெண்ணெய் படிரெண்டிட்டே
அதமாகு மிளகுபல மரைத்துச்சேர்த்தே
யப்பனே மெழுகுபத மானவாறு
சுதமாக வடித்ததனை மூழுகும்போது
சொல்வதென்ன குட்டமொடு சொரிசிரங்கே. (125)

சிரங்குடனே கிரந்திபத்துஞ் சூலரோகஞ்
செங்கரப்பான் வண்டுகடி சில்விஷங்கள்
குரங்குபோ லிருக்கின்ற வலிசயங்கள்
குற்றிருமல் வாதஜலங் குடிபோமென்று
வரங்கொடுக்குஞ் சிவனுரைத்த வார்த்தைகேட்டு
மாயிசொல்ல யானறிந்து வாழ்த்தினேன்காண்
அறங்கதுவா யின்னமொரு தைலங்கேளா
யமுக்கிரா பலம்பத்து வாகாய்வாங்கே. (126)

## அமுக்குராவேர்த் தைலம்.

வாங்கியே யிடித்ததனைப் பதக்குநீராய்
வடித்துக்கொண் டெண்ணெய்ப்படியதனிற்சேர்த்தே
ஓங்கியே யெலுமிச்சஞ் சாறுநாழி
யொக்க விட்டு மெழுகுபத மாகப்பார்த்துத்
தேங்கியே வடித்தெடுத்து வைத்துக்கொண்டு
திறமாக முழுகிவரச் சுருக்கைச்சொல்வேன்
பாங்குடனே பீனிசங்க ளெல்லாம்போகும்
பரிவுள்ள மண்டையிடி பறந்துபோமே. (127)

## இஞ்சித் தைலம்.

பறப்பதற்குப் பின்னுமொரு தைலங்கேளு
பச்சையிஞ்சி காற்றுலாம் பரிந்திடித்துச்
சிறப்புடனே பிழிந்துவடி கட்டிக்கொண்டு
தெளிவுறவே யெண்ணெய்யதிற் படிதான்விட்டே
உறப்புடனே பசுவின்பால் படியேயாகும்
உறுதியாய் மெழுகுபத மாகவாங்கிச்
சிறப்புடனே முழுகிவரப் பருவமாகத்
திடம்பெறவே தீரும்நோய் நிகழ்த்துறேனே (128)

நிகழ்த்துகிறேன் மண்டையிடி சூலவாதம்
நிலைகெட்ட பீனிசங்க ளிளைப்பிளைப்புப்
புகழ்த்துகிறேன் சூலையொடு வாதவாய்வு
பொல்லாத கால்கடுப்பு நெஞ்செரிப்பு

மகத்திலே மெய்நோவ தெல்லாம்நீங்கும்
மாளுமடா குட்டங்க ளனந்தங்கேளு
ஜெகத்திலே நாடாமற் போகுப்பாரு
செம்முள்ளி யெண்ணெய்தனைச் செப்புவேனே (129)

சேம்முள்ளித் தைலம்.

செப்புவேன் செம்முள்ளி பலம் நூறப்பா
சிறக்கவே சமூலமா யிடித்துப்போட்டே
ஒப்புவேன் றாணிநீ ரதிலேயூற்றி
யுறுதியா யெட்டொன்று யிறக்கிக்கொண்டே
அப்புவே னதைவடித்து நாழியெண்ணெய்
யதைவடித்துக் காய்ச்சியே யிறக்கிவைத்து
நப்புவேன் முழுகிவருங் காலந்தன்னில்
நன்றாகத் தீரும்நோய் நவிலக்கேளே. (130)

நவிலக்கேள் சயமிளை சயரோகங்கள்
நாடாது மந்தார காசந்தானும்
கவிலக்கேள் வாதமெல்லாங் காணுதோடுங்
கண்ணினீர்ப் பாய்ச்சலொடு குறைநோயெல்லாம்
அவிலக்கேள் புண்புரைக ளனைத்துந்தீரும்
அரையாப்புக் கிரந்திமூத லண்டவாய்வு
உவிலக்கேள் வீக்கமொடு விடப்பாகந்தான்
ஓடுமடா வித்தைல முழுகும்போதே. (131)

சாரணைவேர்த் தைலம்.

முழுகவே யின்னமொரு தைலங்கேளு
மூக்கியமாய்ச் சாரணைவேர் பலந்தான்பத்துத்
தழுகவே யிடித்ததனைப் பதக்குநீரில்
தாக்கியே யெட்டொன்றாய்க் காய்ச்சியேதான்
ஒழுகவே யொருநாழி யெண்ணெய்சேர்த்தே
உத்தமனே மெழுகுபத மாயிறக்கிச்
செழுகவே முழுகிவரும் போதுமைந்தா
சிதறிப்போம் வாதத்தால் வந்தகூறே. (132)

### இருவேலித் தைலம்.

கூருக விருவேலி பலம்நூறப்பா
கொத்தாக நிறுத்திடித்துத் தூணி நீரிற்
பேருக விட்டவித்தே யெட்டொன்ருக்கிப்
பேணியே யெண்ணெய்யதில் நாழிவார்த்து
வீருகக் கொதித்துவற்றி யெழுகதாஞல்
மெய்யெங்கும் பூசிமெள்ள முழுகும்போது
தேருத வுஷ்ணங்கள் கிறுகிறுப்புச்
சேட்மபித்தங் கண்புகைமண் டலத்திலாமே. (133)

### அகிர்கட்டைத் தைலம்.

ஆமின்ன மகிற்கட்டை பலமோகேளா
யைம்பதுகாண் ஞக்கியதைத் தூளாய்ப்பண்ணித்
தாமே நீர் தூணிவிட்டே யெட்டொன்ருக்கித்
தப்பாம லெண்ணெய்யதில் ஞழிசேர்த்துப்
போமேகேள் மெழுகுபத மானவாறு
புகழாக வடித்துநீ முழுகிஞக்கால்
வேமின்ன நீர்த்தோஷ முடனேயப்பா
மேகங்கள் தீருமென்று விளம்பிஞேமே. (134)

### அறுகம்வேர்த் தைலம்.

விளம்புவே னறுகம்வேர் பலந்தாநூறு
வேரிலுள்ள பச்சையெல்லாந் தள்ளிப்போட்டு
தளம்பவே நன்ருக வவித்துக்கொண்டு
தண்ணீர்தா ஞறுபடி யதிலேவார்த்துக்
குளம்பாகக் காய்ச்சிடுவா யெட்டொன்ருக
குறிகண்டு வடித்தெண்ணெய் நாழிசேர்த்து
வளம்பெறவே மெழுகுபத மானவாறு
வாங்கியே பருவமாய் முழுகுவாயே. (135)

முழுகியே வரும்போது குணத்தைக்கேளு
மூலத்துச் சூடுடனே கபாலச்சூடும்
தழுவியே பித்தமெல்லாந் தலைகெட்டோடும்
தன்னுக்குள் வாதமெல்லாந் தவறுண்டேபோம்

அழுகியே வருங்கிராந்தி சூலை நீர்கள்
ஆனதொரு வயிறெரிவு நெஞ்சிலேவு
கொழுவியதோர் நீர்க்கடுப்பு மேல்வரச்சி
கோபித்த வக்கினியுங் குளிர்ந்துபோமே. (136)

கொடுப்பைத் தைலம்.

குளிரவின்னம் வகையொன்று சொல்லக்கேளு
கொடுப்பையிந் நீர் படியெண்ணெய் சரியேயாகும்
தளிரான கோஷ்டமதில் பலந்தானென்று
தன்மையுள்ள பசுவின்பால் விட்டேயாட்டி
எளிதாகக் கரைத்துவிட்டு மெழுகதானல்
யிறக்கிமெள்ள வடித்துக்கொண் டெழிலாய்நாளும்
நளினமாய் மூழுகிவா மண்டலத்தில்
நலமாகத் தீரும்நோய் நவிலக்கேளே. (137)

கேளப்பா பித்தமெல்லாங் கெதிகெட்டோடுங்
கிறுகிறுப்பு மண்டையிடி ஜன்னிதாகம்
பாளப்பா வுஷ்ணங்க ளுட்சுரங்கள்
படுபாவி மேலெரிவு கைகாற்காந்தல்
தேளப்பா கண்ணெரிவு சிரசுச்சூடுந்
திரேகவலி யெரிகுன்மந் தீர்ந்தபின்னும்
வாளப்பா கண்ணுக்குத் தெளிவுண்டாகும்
மகத்தான தைலமிது மருவிச்செய்யே. (138)

கையாந்தகரைத் தைலம்.

செய்யவே யின்னமொரு சேதிகேளு
செகத்திலுள்ள கையாஞ்சாற் படிதானென்று
வெய்யவே குமரிச்சார் படிதானென்று
விளம்பவே நெல்லிக்காய் சாறதொன்றே
உய்யவே மூன்றுமது வொக்கச்சேர்த்தே
வுறுதிபெற வெள்ளெண்ணெய் படிதானதும்
மெய்யாகச் சாதிக்காய் பலமவ்வீதம்
விருதாக வேயரைத்துக் கலந்துபோடே. (139)

போட்டிவற்றை மெழுகுபத மாகப்பார்த்து
புகழ்பெறவே வதைத்தேய்த்து முழுகும்போது
தாட்டிகமாய்க் கண்ணேவு தலைநோவோடு
சளமான செவிநோவுஞ் சார்பித்தத்தை
ஓட்டிவிடும் உஷ்ணங்கள் பீனிசங்க
ளோடிப்போ மென்றுநா னுரைத்தவாறு
நாட்டி லுள்ளோர்க் கின்னமொரு தைலங்கேளு
நலமான சவரி பலம் நூறுவாங்கே. (140)

சவரித் தைலம்.

பலம்நூறு தானிடித்துத் தூணி நீரிற்
பண்புடனே யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சி
சலமதனை யிறக்கிக்கொண் டெண்ணெய்நாழி
தயங்காம லிட்டொன்றாய்க் கூட்டிச்சேர்த்து
நலமாகக் கருஞ்சீரம் பலந்தானென்று
நாடியதைத் தயிற்போட்டுக் கரைத்திட்டேதான்
பெலமான மெழுகுபத மாகும்போது
பிசகாமல் வடித்தெடுத்து முழுகுவாயே. (141)

வாய்ப்பான வாதமொடு குட்டமெங்கே
வாதத்தா லெழுந்ததொரு கரப்பானெங்கே
காய்ப்பான காய்ப்பேது கழலையேது
கண்டத்தில் வீக்கமுதல் வாடிப்போகும்
நோய்ப்பான நோயெல்லா மகன்றுபோகும்
நுணுக்கமாய்த் தைலமொன்று நுவலக்கேளு
சாய்ப்பான செந்நாவற் பட்டைத்தூளுஞ்
சாங்கமாய்ப் பலம்நூறு சாற்றிடாயே. (142)

செங்நாவற்பட்டைத் தைலம்.

தாக்கியே யிடித்ததனைத் தூணி நீரிற்
தயங்காமற் போட்டுபத மெட்டொன்றாக்கி
நோக்கியே பால்நாழி யுடனேமைந்தா
நுணுக்கமாய் வேப்பெண்ணெய் படிதானென்றே

ஆக்கியே வசம்பதுவும் பலமேதூக்கி
யரைத்துநீ கரைத்துவிட்டு மெழுகதானுற்
தூக்கியே வடித்துமெள்ள மூழுகினுக்கால்
துடியான வாதமொடு பித்தம்போமே. (143)

அகிற்பட்டைத் தைலம்.

போகவே யின்னமொரு தைலங்கேளு
புகழான வகிற்பட்டை பலந்தானாறு
தாகநீ யிடித்ததனைத் தூணிநீரிற்
சாதகமாய்ப் போட்டவித்தே யெட்டொன்றுக்கி
வேகமா யெண்ணெய்யதில் நாழிவிட்டு
வேப்பெண்ணெய் படுபாதி கூடச்சேரு
நாகவல்லிக் கொடிச்சாறு மொக்கவார்த்து
நலமாக மெழுகுபத மானபோதே. (144)

திராப்பாசித் தைலம்.

பதமாக மூழுகிவாத் தீரும்நோய்கள்
படுபாவி வாதமெல்லாம் பறந்துபோகும்
இதம்படவே யின்னமொரு தைலஞ்சொல்வேன்
இடித்திடுவாய் திராப்பாசி பலந்தான்ரெண்டு
சிதமான தூணிநீர் தன்னிற்போட்டுச்
சிறக்கவே யெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
சுதமாக யோண்டத் தெண்ணெய்நாழி
தூளாக்கி மஞ்சள்பலம் போட்டுக்கிண்டே. (145)

கிண்டியே வைத்திடுவாய் மெழுகதாகக்
கெடிகலங்கி யோடிவிடும் வாதமெல்லாம்
பண்டிதருக் கிம்முறைகள் பாடமுண்டோ
பார்ப்பதற்கு வெகுசுளுவு பரிந்துபாரு
கண்டிதமாய்ச் சொல்லிவிட்டே னுணுக்கமெத்த
கழிகெட்ட நோய்களது தீரவென்றே
உண்டுகொண் டிருப்பதற்குச் சொர்ணமுண்டோ
வுறுதியிந்த நூன்முறையை யூணிப்பாரே. (146)

## கிருதவகைகள்.

### பொன்னுங்காணிக் கிருதம்

ஊணியே யின்னமொரு சேதிகேளாய்
உள்ளுக்குத் தைலமொடு கிருதஞ்சொல்வேன்
காணவே காணிவேர் பலந்தானென்று
கனமான வெட்டிவேர் விலாமிச்சய்வேர்
பூணியே யோரிதழ்வேர் சிறுகீரைதான்
புகழ்வேரும் வகைக்குமொரு பலமதாகப்
பாணியே பாலதுவார்த் தரைத்து நெய்தான்
படிரண்டுக் குள்ளிட்டு காய்ச்சுகாய்ச்சே. (147)

காய்ச்சியே யுட்கொள்ளக் கரண்டிவீதங்
கண்ரோகம் பதினெட்டுங் காணாதோடும்
மாச்சுதே யுட்சுரங்க ளகன்றுபோகும்
மனுவாதி யுஷ்ணங்கள் மேகமின்னும்
போச்சுதே வரட்சியுட னுள்ளுள்ரோகம்
யுண்ணுன வக்கரங்கள் போகுஞ்சொன்னேன்
ஏச்சுதே யெண்ணாதே யிடுசாதிக்கா
யினிதான வதிமதுர மாச்சக்காயே. (148)

### சதாவேரிக் கிருதம்.

காயொன்று வகைக்குமொரு கழஞ்சிவீதங்
கரைபாலில் முன்போல நெய்க்குள்ளேதான்
தாயென்றே யின்னமொரு கிருதஞ்சொல்வேன்
சதாவேரிக் கிழங்கினுட சாறுநாழி
வாயென்ற திரிகடுகு திரிபலாதி
வகைவீதங் கழஞ்சியொன்று கூடச்சேர்த்து
ஓயென்றே யெரியிட்டு மெழுகதானல்
சீக்கிரத்தில் வடித்திடுநீ யியல்பைக்கேளே. (149)

இயல்பாகக் கரண்டி நிறை யுண்ணுங்காலே
யெழுந்தொரு கரப்பான்க ளெல்லாம்போகும்
மயலான நீர்விஷங்க ளனைத்துந்தீரும்
முறுக்கியெழும் வாய்வுடனே யிறைச்சலேகுஞ்

செயலான பித்தமொடு சிலேற்பனங்கள்
ஜெனித்ததொரு கிறுகிறுப்புச் செரியாமாந்தம்
மியலான கிருமிகளு மற்றுப்போகும்
வெண்ணையா யின்னமொரு கிருதங்கேளே. (150)

திரிகடுக்க் கிருதம்.

கிருதமாந் திரிகடுகு திரிபலாதி
கேளப்பா வகைவகைக்குப் பலந்தானென்று
நிருதமாய்ப் பலம்பத்துப் படியிற்குள்ளே
நேராகப் போட்டுபத மெட்டொன்றுக்கி
விருதாவாய்ப் போகாது மெழுகதானல்
மேன்மையாய் வடித்ததனை வைத்துக்கொண்டு
சிறுகவே கறண்டி நிரை கொள்வாயானல்
திருகிற வியாதியதைச் செப்பக்கேளே. (151)

செப்புவேன் சீரகமு மோமங்கூட்டிச்
சிதருமற் சூரணித்துப் பதனம்பண்ணி
இப்புவியில் வெருகடிநெய் தேனிற்கொள்ள
யீரெட்டுக் கரப்பானுஞ் சிரங்குகுஷ்டம்
நப்புவேன் கிருமியுடன் ரசாயணங்கள்
நாடாது கிரந்திமுதல் கிராணிமூலம்
எப்போதும் வாராது சொன்னேன்மைந்தா
யின்னமொரு கிருதவகை யியம்பக்கேளே. (152)

தூதுவளைக் கிருதம்.

இயம்பக்கேள் தூதுவளை பலமோபத்து
இயல்கண்டங் கத்திரியு மதுதான்வீதந்
தயவான துளசியுமவ் விடையேசேரு
சாற்றியதோர் தோடையது மொப்பதாகும்
நயம்பெறவே பலம்பத்து விஷ்ணுகிராந்தி
நன்முன பிரமியதும் பலம்பத்தாகுஞ்
செயம்படவே யிடித்திவற்றைத் தூணி நீரில்
கிரமுடனே யெட்டொன்று யெரித்திறுத்தே.(153)

இறுத்திட்டே யெண்ணெய்யுடன் நெய்யுங்கூட்டி
யிதமுடனே திப்பிலியுஞ் சிற்றரத்தை
உறுத்திட்டே வகைக்கியரைப் பலமாய்த்தூக்கி
யொளிமெழுகு போலரைத்துச் சேர்த்துக்கிண்டி
முறித்திட்டுப் போகாமல் வடித்துக்கொண்டு
மூக்கியமாய்க் கரண்டி நிறை யளவேயாக
ஒருத்திட்டங் கொண்டாக்கால் தீரும்நோய்கேள்
வுற்றதோ ரிருமலெல்லா மோடிப்போமே. (154)

ஓடிப்போந் தேன்கூட்டிக் கொண்டாயானு
லுட்கரங்க ளிரைப்பிளைப்பு துப்புகக்கல்
நாடாது வாய்வோடு கபங்கட்கெல்லாம்
நடுங்கியே பறக்குமடா நளினமாகுந்
தேடிப்போந் திரிகடுநெற் பொரிதன்னேடே
தேனிலே தின்றுவிடு கிருதஞ்சேர்த்து
வாடிப்போ மோரகோகோ வகுத்தநோய்கள்
வண்மையா மென்றருளிச் செய்தவாறே. (155)

சன்னிக்குத் தைலம்

செய்தபடி சன்னிக்குத் தைலமொன்று
செப்பக்கேள் வெள்ளுள்ளி வசம்பினேடே
உய்தவொரு நிலவேரு மூசுறுமுட்டை
யுறப்பான தண்டுடனே கோழிமுட்டை
தெய்தமுள்ள நெய்நாழி வேம்பிணெண்ணெய்
நிரையாகுஞ் சரக்குகளைப் பலமாய்த்தூக்கிச்
செய்தபே ராமணக்கு யெண்ணெய்நாழி
சிறப்பாக விட்டதிலே யொரித்துக்கொண்டே.(156)

கொண்டுவிட வெண்ணெய்க்கு வகையைக்கேளு
கோலமுள்ள சுக்கிடித்துக் கிளிபோற்கட்டிச்
சுண்டவைத்துத் தைலத்திற் பதமாய்மைந்தா
சுகமாகக் குத்திவிட சன்னிவாதம்

மிண்டுசெய்யும் வலியைந்துஞ் சிதறிப்போகும்
மீளாதே சன்னிதனைக் குள்ளுக்கேற்று
பண்டுள்ள நோயதுதான் தீருமென்று
பண்பாக வித்தைல மியம்பினோமே. (157)

நவச்சாரக் குழம்பு.

இயம்புகிறேன் நவச்சாரக் குழம்புகேண்மின்
யெருக்கம்பா லுழக்குடனே கள்ளிப்பாலாற்
சுயமான சாரமது கழஞ்சுபத்துச்
சுகமாகத் தானரைத்தே மெழுகதாக்கி
தயம்பெறவே யாமணக்கி னெண்ணெய்சேர்த்து
நாணயமாய்ச் செப்புதனி லடைத்துக்கொண்டு
சயமான பெருவயிறு மகோதரங்கள்
தன்னோடு ஆம்பல்விஷப் பாகந்தானே. (158)

பாகமாய் மிளகுடனே குன்றிவித்து
பகருகின்ற சுண்டைக்காய் வீதங்கொள்ளு
வேகமாய்க் கிருமிகளு மலபேதங்கள்
விட்டுவிட வேணுமென்றால் வெந்நீர்கொள்ளு
தாகந்தான் விஷம்போன்ற நீர்களெல்லாம்
தர்டாது ரவிகண்ட பனியைப்போலே
ஏகுமே யிம்மருந்து கொண்டாயானல்
யேழுநாள் பால்கொள்ள வியல்பதாமே. (159)

மேனிச் சூரணம்.

தானென்ற மேனிச்சூரணமே செய்து
தாங்கரிய சீரகத்து னொக்கச்சேர்த்து
நாமென்ற நாற்பதுநாள் கொள்வீரானல்
நாடாது வாய்வெல்லா மனந்தந்தீருஞ்
சாமென்ற தீபனங்கள் மிகவுண்டாகும்
சணத்திலே மந்தமெல்லாந் தவறுண்டோடும்
வேமென்ற சில்விஷங்க ளெல்லாந்தீரும்
வேதாக்கினிக்குமரன் பொடியதாமே. (160)

### சீரகச் சூரணம்.

பொடியான பொடியொன்று சொல்லக்கேளு
புகழ்பெரிய சீரகமோ பலந்தானென்று
செடியான வோரிதழ்தன் பொடிதானென்று
சிவந்தொரு சந்தனமும் பலந்தானென்று
மடியவே யிடித்துத்தூள் வைத்துக்கொண்டு
வளமாக நறுநெய்யிற் கழஞ்சியுண்ணு
துடியான வுஷ்ணங்கள் ஊணில்ரோகஞ்
சுருக்குடனே நீர்க்கடுப்பு மேகம்போமே. (161)

மேகமுட னுட்காய்ச்ச லெரிவுகாந்தல்
மிகையாக வந்தகுன்ம மெல்லாந்தீரும்
போகுமின்ன மெலும்புருக்கி தசையடைப்பும்
பொறுக்காத நீர்த்தாக மார்பினோயும்
வேகமுறும் வாய்நாற்ற மேனுற்றங்கள்
விட்டோடிப் பறக்குமின்னம் விளப்பக்கேளு
கூகைநீர் கஞ்சாவுஞ் சாதிக்காயும்
கோகோவாய் விளங்கங்குரா சாணியோடே. (162)

### குரோசாணிச் சூரணம்.

குரோசாணி யிவைபலமோவ் வொன்றேயாகுங்
குணமாக வேவறுத்துச் சூரணித்து
நிராசாணி யாகியதோர் தூளில்மைந்தா
நேராகக் கருவேம்பின் பொடியைச்சேர்த்தே
யுராசாணி வாழைப்பூ வவித்துப் புட்டாய்
யுறப்பிழிந்து சாற்றினிலே கொண்டாயானல்
முராசாணி யானதொரு கடுப்பிளைப்பு
மூலத்திற் சூடுபோம் முழங்குவாயே. (163)

### கோடிவேலிச் சூரணம்.

முழங்கவே வேறுவகை சொல்லக்கேளு
மூகண்டக் கொடுவேலி சூரணித்து
விழுங்கவே படியொன்று சீனிப்பாவு
வீறுக மேனித்தூ ளளவேயாகுங்

கழங்கமறக் கார்போக அரிசியோடே
கருஞ்சீரம் நற்சீரம் மூன்றுமைந்தா
புழுங்கவே வகைவகைக்குப் பலமொன்ருகப்
புனிதமாய்ப் பொடித்திட்டுப் புகழ்ந்துவைத்தே (164)

வைத்திட்ட சூரணத்தைத் தேனிற்கொள்ள
வருஞ்சூலை கிரந்திகுட்டம் வாதவாய்வு
வெய்த்திட்ட வண்டுகடி புழுவெட்டோடு
விஷகடியு மெலிகடியும் விலகிப்போகும்
மெய்த்திட்ட மாகியதோ ரபானவாய்வு
விரைந்திறங்கு மூலத்திற் சூடும்நீங்குங்
கைத்திட்டத் தொழிலதனைச் சொல்லிவிட்டேன்
கனமான மிளகுநீர்க் கியாழங்கொள்ளே. (165)

தும்மட்டித் தைலம்.

கொள்ளவே மண்டலத்திற் பாண்டுதீருங்
குணமாக வின்னமொரு முறையைக்கேளு
பிள்ளையில்லாப் பேர்களுக்கு மருந்துசொல்வேன்
பேயனது தும்மட்டி வித்துவாள
முள்ளபடி குழித்தைலஞ் சமனுய்வாங்கி
யுறுமஞ்சள் பொடியதுவோ காசேதுக்கு
வள்ளலே தைலமுமந் நிறையேசேர்த்து
மத்தித்துக் கொண்டுவிடக் கெற்பவாய்வே. (166)

கெற்பவாய் வோடவென்று வீணுய்மைந்தா
கிலேசிக்கத் தான்வேண்டாம் நோய்கடீருஞ்
செப்பமுடன் மருந்துண்ணில் வெந்நீர்கொள்ளு
திரும்பியே பேதித்தால் கஞ்சிகொள்ளு
தப்பவே கொடுத்தநாள் முதலாய்த்தொட்டு
நன்ருக வொருபொழுதாய்க் கொண்டுவா நீ
அற்பமென்று நினையாதே யுறுதியாகும்
மதைத்தவிர பின்னையுமோர் தடையுண்டாமோ (167)

### கொம்பரக்குக் கிருதம்.

தடையில்லாக் கொம்பரக்குக் குந்தரிக்கம்
சாதிக்காய் குரோசாணி யோமம்தானும்
திடமாகச் சூரணித்தே நல்லெண்ணெய்க்குள்
திரட்டியே கொண்டுவிடு சிறுபுன்னைக்காய்
குடலோடு பற்றியதோர் கிராணிமூலங்
குத்துகின்ற குருக்குவலி மூலச்சூடு
கடல்போல வந்ததொரு கடுப்பெல்லாம்போம்
காதடைப்பு புண்ணினுக்குங் கண்டவாறே. (168)

### மூசுறுமுட்டைத் தைலம்.

கண்டதொரு சேதியுண்டு சொல்லக்கேளு
காதிலுள்ள வியாதியெல்லாங் கட்டாய்த்தீர
விண்டபடி பூநாக மூசுறுமுட்டை
வேரிலுள்ள நண்டிறைச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடி கோழிமுட்டை வசம்புகுக்கல்
குணமாக வகைவகைக்குக் கழஞ்சிகூட்டிப்
பண்டருளும் வேப்பெண்ணெய் தன்னிற்சேர்த்துப்
பதமாக வெரித்ததனைக் காதிற்பாய்ச்சே. (169)

பாய்ச்சியே யடைத்திடுவாய் பத்தாநாளிற்
பளிச்சென்று செவிகேட்குஞ் சீழ்பாச்சற்போம்
ஆச்சுதே குத்துளைச்சற் பூச்சிசாகும்
அடைப்புவிடுங் காதிறைச்ச லகன்றுபோகும்
வாச்சுதே யின்னமொரு வரிசைகேளு
வாயிலுள்ள வியாதியெல்லா மகன்றுபோக
பாச்சியே முன்பாகத்தில் தைலம்பூசிப்
பச்சையாய்த் தின்றூ துக்கப்பற்குத்தும்போமே(170)

குத்துவிடு முப்பிரண்டை வேர்க்கியாழங்
கொப்பளிக்கப் பல்லரணை தந்தசூலை
அத்துப்போ மசைந்தாலு முறத்துநிற்கும்
அழுக்கெல்லாந் தீர்ந்தகலு மதன்பின்கேளு

சித்தாகும் நாக்கில்வருஞ் சிங்கிரோகந்
 தீரவொரு மருந்துசொல்வேன் சிவவேம்பின்வேர்
மூத்தாகும் பல்விளக்கப் பத்தாநாளில்
 முறையான நோய்களெல்லா முழுதும்போமே(171)

வெள்வேல் வேர்த் தைலம்.

முழுதுமே போகவொரு மருந்துசொல்வேன்
 மூதண்ட வெள்வேலுங் குமிளும்வன்னி
பழுதில்லாக் குண்டலமாம் பாலையோடே
 பருத்ததோ ரெருக்கிலையு மாசுகாரை
தொழுதோண்டிப் பட்டைமிவை சமனுய்த்தூக்கிச்
 சுந்தரனே தூணிநீ ரதனிற்போட்டு
வழுவுபடா தெட்டான்ருய்க் காய்ச்சிக்கொண்டு
 வளமான செம்பீரஞ் சாறுநாழி. (172)

நாழியா மெள்ளெண்ணெய் யளவாய்வார்த்து
 நலமான துருசுவெள்ளைக் குந்தரிக்கம்
வீழவே வகைவகைக்குக் களஞ்சிவீதம்
 மிரளாமற் பொடித்திட்டு வடித்ததோடே
கோழியி னுதிரம்விட்டுக் கொப்பளிக்கக்
 குறட்டைகளில் கட்டுமுதல் குலைந்தபல்லின்
வாழியென்ற புண்கள்முதல் வீக்கமெல்லாம்
 வாங்கிப்போம் வளமையுடன் வரிசைபாரே (173)

பாகலிலைத் தைலம்.

பார்ப்பதற்கு இன்னமொரு சேதிகேளு
 பாகலிலைச் சாறுடனே கொம்மட்டிச்சார்
வேப்பிலையின் றன்சாறு மெருக்கன்சாறும்
 விழுதியுட யிலைச்சாறும் வகைக்குநாழி
சேர்ப்பதுஆ மணக்கெண்ணெய் வேப்பெண்ணெய்யும்
 சேர்வகைக்கு நாழிவிட்டுப் பதமாய்வாங்கித்
தார்ப்புடனே காசிடைதான் கொள்ளும்போது
 சலக்கட்டு மலக்கட்டுங் கிருமிபோமே. (174)

இருமியென்ற புழுக்களெல்லா மற்றுப்போகுங்
கெற்பத்தில் மலக்கட்டு கெதிகெட்டோடும்
வருமையென்ற வாய்வனைத்தும் அன்றேபோகும்
வாதமொடு மலக்கட்டுந் திரண்டவாய்வும்
ஒருமித்துக் காணும லேங்கியோடும்
உலகத்திற் சுருக்கிதுதா னுணர்ந்துதேறு
கருமமென்ற வகைகளெல்லாஞ் சொல்லிவிட்டேன்
கஷாயத்தின் பெருமையின்னுங் காட்டுவேனே (175)

## கியாழக் காண்டம்.

### மருதோன்றிக் கியாழம்.

காட்டுவேன் மருதோன்றி வேர்தான்மைந்தா
கால்பலங்கள் சீரகமு மொக்கச்சேர்த்து
ஓட்டுகிற யிருநாழி நீரிலிட்டே
யுழக்காகக் காய்ச்சியதை ரெண்டுவேளை
மூட்டுகிறேன் மூன்றுதினங் கொள்வீரானால்
முறைச்சுரமும் விஷச்சுர மு மூலவாய்வு
மீட்டுவிடும் பித்தமொடு மாந்தந்தீரும்
விளம்புவே னின்னமொரு விதமுந்தானே. (176)

### வெட்பாலைக் கியாழம்

விதமென்ன வெட்பாலை சீரகந்தான்
வீருக வகைவகைக்குப் பலங்கால்தூக்கி
இதமுடனே யிருநாழி நீரில்விட்டே
யெட்டொன்றாய்க் காய்ச்சியதை யிறுத்துக்கொண்டு
பதமாகக் குடித்துவரில் தீரும்நோய்கள்
பறக்குமடா வாய்வெல்லாம் பாருபாரு
மிதமில்லாக் குன்மவகை யனைத்துந்தீரும்
மேன்மையா யின்னமொரு வரிசைகேளே. (177)

### வில்வவேர்க் கியாழம்.

வரிசையுள்ள நெற்பொரியும் வில்வவேரும்
வகைக்குக்காற் பலமாயீர் நாழிநீரில்
உரிசையுட னெட்டொன்றாய் வடித்துக்கொண்டே
யுட்கொள்ள வந்தசத்தி விக்கல்போகும்

பிரியமுட னின்னமொரு கியாழஞ்சொல்வேன்
பேரான முன்னைவேர் வில்வவேருந்
துரிசான சுக்குடனே வகைக்குக் காலாய்ச்
சூட்டியே யிருநாழி நீரிலிட்டே. (178)

முத்தக்காசுக் கியாழம்.

இட்டவித்தே டெட்டொன்ருய்ச் சுண்டக்காய்ச்சி
யெடுத்து நீ கொண்டிடவே விக்கல்வாந்தி
முட்டவிடும் பித்தமுட னுழலைதாக
முறையான சுரந்தீரு மொழிந்தவாறு
சட்டமுட னின்னமொரு சேதிகேளு
தருவான முத்தமொடு விஷ்ணுசாந்தி
இட்டமுடன் காற்பலமா யிடித்துத்தூக்கி
யிருநாழி நீரினில்விட் டெட்டொன்ருக்கே (179)

திரிபலாதிக் கியாழம்.

ஆக்கியே மூன்றுநா ளிருபோதுண்ண
வகன்றசய மீளையிளைப் பதிகமூச்சு
போக்கிவிடு மதனேடு மிளகுகூட்டிப்
புண்ணியனே கியாழத்தைத் தேனிற்கொள்ளு
பாக்கியமா யின்னமொரு வகையைச்சொல்வேன்
பச்சைநெல்லித் தான்றியுடன் கடுக்காய்மூன்றும்
நோக்கியே வகைக்குக்காற் பலமேதூக்கி
நுண்மையாய் மிளகதிலே கழஞ்சுகூட்டே. (180)

கூட்டியே யிருநாழி நீரிலிட்டுக்
குலாவியே யெட்டொன்ருய்த் தேனுஞ்சேர்த்து
நாட்டியே திரிகடுகு சூரணித்து
நலமாக விட்டருந்த சிலேற்பனங்கள்
நீட்டியே கபமீளை யிளைப்புக்காய்ச்சல்
நீங்குமே சயமனைத்தும் நில்லாதோடும்
ஓட்டியே விடுவதற்கா யின்னும்வேறே
யுரைக்கிறே னுலகத்தோர் பிழைக்கவென்றே. (181)

### சந்தனக் கியாழம்.

வென்றதொரு சந்தனமும் விளாமிச்சோடு
வெட்பாலை முத்தமுடன் சுக்குமைந்தா
நன்றெனவே வகைக்குக்காற் பலமதாக
நலமுடனே தூக்கியிரு நாழிநீரிற்
பொன்றவே யெட்டொன்றாய் வடித்துக்கொண்டு
புகழ்சீனி யுடன்பத்து நாள்தான்கொள்ள
சென்றதொரு சுரம்வாய்வு சலதோஷங்கள்
சிரசிலுள்ள பித்தநீர் வாதம்போமே. (182)

### வேம்புக் கியாழம்.

வாதமொடு தாகங்கள் நீர்க்கடுப்பு
மஞ்சளுறும் பித்தக்கா மாலைதீரும்
வேதமா யின்னமொரு கியாழஞ்சொல்வேன்
வேம்பினது பட்டையுடன் மிளகுஞ்சுக்கும்
நாதமுடன் வகைக்குக்காற் பலமேயாக
நளினமா யிருநாழி நீரிலிட்டுப்
போதமுட னெட்டொன்றாய் வடித்துக்கொள்ளு
புழுக்கிருமி மந்தமொடு வாய்வும்போமே. (183)

### இருவேலிக் கியாழம்.

எல்லாந்தான் போகவொரு கியாழஞ்சொல்வே
னிருவேலி மதுரமுட னிஞ்சிமூன்றுஞ்
சொல்லாமல் வகைக்குக்காற் பலமாய்த்தூக்கிச்
சுகமாக விருநாழி நீரிலிட்டு
வெல்லவே தீயெரித்து யெட்டொன்றாக்கி
வீறுகப் பத்துநாட் கொள்வாயானல்
வல்லதொரு வாய்வுபித்தஞ் சோகைபாண்டு
வாங்கிவிடும் அரோசிகமும் வாராதென்னே. (184)

### பச்சிலைப் புட்டவியல்.

வாராம லின்னமொரு சேதிசொல்வேன்
மைந்தனே புட்டவியல் மார்க்கங்கேளு
நாரான பேய்ப்புடலும் பற்படாகம்
நருந்துளசி தூதளையுங் கண்டங்காலி

பாராமற் ரேடையிலே சங்குசுக்கும்
பருவமுறு திப்பிலியு மிளகுமூலி
சீராக வகைவகைக்கோர் பிடியதாகச்
சேர்த்தமருந் தொருகழஞ்சு நிறுத்துவாங்கே (185)

வாங்கியே துணியில்வைத்துப் புட்டேயாக்கி
வளம்பெறவே பிழிந்துகற் கண்டுதேனில்
ஓங்கியே கொண்டுவிடச் சிலேற்பனங்க
ளுள்ளிரும லுட்சுரங்கள் வாதவாய்வு
நீங்கியே போமென்று சொன்னேன்சொன்னேன்
நிச்சயமா யின்னமோ ரிலே நீர்சொல்வேன்
தாங்கியே முசுமுசுக்கை விஷ்ணுமூலி
தன்னுடனே நிலவேம்பு சங்கங்குப்பி. (186)

குப்பியது வகைவகைக்கோர் பிடியதாகக்
குறுகவே தானறிந்து சட்டிதன்னிற்
செப்பமுட னேயவித்துப் பிழிந்துகொண்டு
சேர்க்கின்ற மருந்ததனைச் செப்பக்கேண்மின்
ஒப்பமுடன் சீரகமுஞ் சுக்கிரண்டும்
உடன்வருத்துச் சூரணித்து மேலேதூவி
இப்புவியிற் றேன்கூட்டி யுண்பீராகில்
இஷ்டமுள வாதசுர மிடைந்துபோமே. (187)

மூலிகை அவியல் நீர்.

இடைந்திடவே யின்னமொரு சேதிசொல்வேன்
இயல்பான நிலவேரு மிஞ்சியுள்ளி
மடந்தவே கொத்தானும் வேப்பமொக்கும்
வளமான தொச்சிலேயும் வகையாய்க்கொண்டு
கடந்ததொரு மருந்தெல்லாங் கழஞ்சுவீதங்
கருவாக வேயவித்துச் சாறுவாங்கித்
செட்டந்தனக்குத் தேன்கூட்டிக் கொள்வீராகிற்
செய்யசுரஞ் சன்னிமுதற் போமேவாதம். (188)

வாதமொடு சன்னியெல்லா மாண்டுபோகும்
வஞ்சகங்க ளில்லாமல் மருந்துசொன்னேன்
போதமுடன் கண்டவனே நல்லோனாகும்
பொய்யென்று சொல்பவனே பொல்லாப்பாவி
வேதம்போல் யிந்தநூல் வெளியாய்ச் சொன்னேன்
வித்தையிலே வெகுவித்தை லேசுவித்தை
காதமல்ல தூரமல்ல விரும்பிச் செய்து
கனம்பெற்ற யீஸ்பரனு மிருக்கலாமே. (189)

சிவனார் வேம்புத் தைலம்.

இருக்கவே யின்னமொரு சேதிகேண்மின்
இயல்பான சிவன்வேம்புத் தைலம்வாங்கிச்
சுருக்கமா மம்மூலி சூரணித்துச்
சுகமாகத் தைலத்திற் குழப்பிக்கொண்டால்
முருக்கம்பூப் போலாகு மேனியெல்லாம்
மூனைமுகத்து வெட்டுண்ட புண்ணுமாறுஞ்
சுருக்கியதோர் கால்வெடிப்பு குட்டஞ்சூலே
தொலையாத கடிவிஷமுந் தோற்றுப்போமே. (190)

வீழிவேர்த் தைலம்.

தோற்கவே யின்னமொரு சேதிகேளு
சுருதியாம் வீழிவேர்த் தைலம் வாங்கி
ஆற்கவே யம்மூலி சூரணித்தே
யதிற்குழப்பிக் கொண்டிட்டே மண்டலந்தான்
ஊக்கமுள்ள குட்டமெல்லா மொழிந்துபோகு
முடலில்வந்த வெளுப்பெல்லா மோடிப்போகுஞ்
சேர்க்கவின்னஞ் செப்புகிறேன் றிறமாய்க்கேண்மின்
சேங்கொட்டைத் தைலமதை யிறக்கிக்கொள்ளே (191)

சேங்கொட்டைத் தைலம்.

இறக்கியே பஞ்சாங்கஞ் சூரணித்தே
யிதிற்குழப்பித் தின்றிட்டே யெல்லாநோயும்
பறக்குமடா நரைதிரையும் வாராதென்று
பகர்ந்திட்டே னின்னமொரு சேதிகேளு

சிறக்கவே வேப்பினுட தைலம்வாங்கிச்
சீரகத்தைப் பஞ்சாகச் சூரணித்து
நிறக்கவே யதிற்குளப்பித் தின்றுயானுல்
நீங்காத வாதமெல்லா நீங்கிப்போமே (192)

தேற்றான்விரைத் தைலம்.

நீங்கிப்போங் குட்டமொடு கிரந்திசூலை
நிலையான நரைதிரையும் நிலைகெட்டோடும்
ஓங்கியே யின்னமொரு சேதிகேளு
உறுதியுள்ள தேற்றானைத் தைலயாக்கி
வாங்கியே பஞ்சாங்கஞ் சூரணித்து
வலிவான தைலத்திற் குழைத்துட்கொள்ள
ஏங்கியே வியாதியெல்லாந் திடுக்கிட்டேதான்
இருந்தவிடம் விட்டோடு மிருப்புத்தானே. (193)

வாலுளுவைத் தைலம் - பிராயன் தைலம்.

இருப்பான வாலுளுவைத் தைலம்வாங்கி
யியல்புடனே யுட்கொள்ள மண்டலந்தான்
கருப்பான நோய்களெல்லா மோடிப்போகுங்
கைகண்ட வித்தையடா தைலப்போக்கு
கொருப்பான பிராயனது தைலம்வாங்கிக்
கொண்டிடவே யரையாப்புக் குஷ்டமோடு
பொருப்பான பற்பிளவு முதலாயுள்ள
பொல்லாத நோய்களெல்லாம் போகுந்தானே (194)

வெண்புரசுத் தைலம் - வேள்வேல்த் தைலம்.

தானென்ற வெண்புரசுத் தைலம்வாங்கிச்
சாதகமாய்க் கொண்டிடவே மண்டலந்தான்
ஏனென்ற குஷ்டங்க ளெல்லாம் நீங்கு
மெளிதாக விம்மருந்தை யிசைந்துசெய் நீ
பானென்ற வெள்வேலின் றைலங்கொண்டாற்
பல்லுளைவு நின்றுவிடும் பழமையாகும்
ஊனென்ற வாய்வுபோந் தைலங்கொண்டால்
உறுதியாய் வியாதியெல்லா மொழிந்துபோமே. (195)

## கருஞ் சீரகத் தைலம்.

ஒழியவே யின்னமொரு விபரங்கேளாய்
உரியகருஞ் சீரகமுங் கெந்தகந்தான்
றெளியவே பத்துக்கொன் றுகச்சேர்த்துத்
திறமாகக் குழித்தைல மிறக்கியுண்ண
வளியவே வந்தவினை சிரங்குகுட்டம்
வாதமொடு சூலையெல்லா மகன்றுபின்னுந்
துளிபாயுஞ் சீழ்சலங்கள் கரப்பான்போகுந்
தோலுரியுந் தழுதணையுஞ் சுத்தமாமே. (196)

## அமுக்குறுவேர்த் தைலம்.

சுத்தமா யின்னமொரு சேதிகேளு
சூட்சமா அமுக்குராத் தைலம்வாங்கிப்
பத்தியா யதன்வேரைச் சூரணித்துப்
பாய்ச்சியே கொண்டுவிட யண்டலந்தான்
நித்தமாஞ் சூலையொடு கிரந்திகுஷ்டம்
நீங்காத வியாதியெல்லாம் நீங்கிப்போகும்
உற்றதொன்று உறைக்கிறேன் முக்கியமாக
வுரப்பான சீனப்பாற் தைலம்வாங்கே. (197)

## சீனப்பாற் தைலம் - ஓமத் தைலம்.

தைலத்திற் சூரணத்தைக் குழப்பியுண்ணத்
தனதான சூலைவகை தவறுண்டோடும்
மயிலொத்த செய்தியொன்று யின்னம்வேறே
மாச்சரியத் தைலமொன் றறையக்கேளு
பயிலொத்த வோமமொடு வசம்புகார்கோல்
பாங்காக விவைகளை நீ தைலம்வாங்கித்
துயில்பெற்ற மூச்சாக்கைப் பொடித்திட்டேதான்
துலங்கவே குழப்பியுண்டால் சொல்லுவோமே. (198)

## சாரணை வேர்த் தைலம்.

ஓமென்ற வியாதியெல்லாங் கடலேபுக்கும்
உண்மையா யித்தைல மூறைத்தோங்கேளு
நாமெனவே யதிற்குழைப்பி யுண்ணும்போது
நாடாது கிரந்திகுஷ்டம் நளினமாகும்

வாமென்ற சன்னியொடு வாதமேகும்
வளமாக வின்னமொரு வரிசைசொல்வேன்
ஆமென்ற சாரணைவேர் தனையிடித்து
அருமையாய்க் குழித்தைலம் வாங்கிடாயே. (199)

வாங்கியே வேரனைத்துந் தைலமாக
மைந்தனே யெடுக்கிறதோர் மார்க்கமாகுந்
தாங்கியே யவ்வேரின் சூரணத்தைத்
தானதிலே குழைத்துண்ணத் தீரும்நோய்கள்
தீங்கான வாதமெல்லாஞ் சிதறிப்போகுந்
திசைவாய்வு மலபேதந் தீருந்தீரும்
பாங்கென்ற வித்தனையுஞ் சொன்னேமின்னும்
பகருவேன் வெந்தோன்றிக் கிழங்குபாரே. (200)

வெந்தோன்றிக் கிழங்குத் தைலம்.

கிழங்கதனை நிழலுலர்த்தித் தைலம்வாங்கிக்
கெட்டியாய் வெண்டோன்றி சூரணித்தே
உளங்குளிர விதையதிலே விரவித்தின்றால்
ஓடிவிடுங் குட்டமீ ரொன்பதுந்தான்
களங்கமற நீங்கிவிடு மண்டலத்திற்
காயசித்தி யுண்டாகுங் கவனமாகுஞ்
சளம்போக வோராண்டு கொண்டாயானால்
சகலசித்தி கைவசஞ்சஞ் சீவிபோலாம். (201)

சஞ்சீவிபோலிந்த நூலைச் சொன்னேன்
சண்டாள மாபாவிக் கீயவேண்டாம்
நஞ்சுபோ லாகுமிந்த முறைதானப்பா
நடுங்கவே வியாதிகளை நாடிக்கொல்லும்
கெஞ்சுவா ருலகுதனில் வாகடத்தைக்
கேட்டாலுங் கொடுக்கரிது கேள்வியன்றி
மிஞ்சவே யுபசரித்துத் தொண்டுசெய்து
வேணதன மீய்ந்தாலு மீயார்தானே. (202)

தானென்ற செய்தியொன்று சொல்லக்கேளு
சாதகமாய்ச் செந்தூரஞ் செய்துகொண்டே
வானென்ற லேகியங்கள் வளமாய்க்கூட்டி
வகையாக வனுப்பானந் தனையறிந்தே
ஏனென்ற கியாழமுட னிதனையெல்லா
மியற்றுவேன் றெழிலாளி யிதமாய்த்தானே
பானுவின்முன் பனிநீங்கும் பான்மைபோலப்
பலபிணியும் நீங்கிவிடும் பரிந்தீய்வாயே. (203)

ஈவந்த நூற்றெருகைதா னிருநூற்றைந்தும்
யிகத்திலுள்ளோர் பிழைக்கவென் றிரங்கிச்சொன்ன
தாயிருக்கப் பிள்ளைக்குத் தயக்கமில்லாத்
தன்மைபோ லவுமிவற்றைச் சாற்றினேன்யான்
நோயில்லாச் சாவேது யொருநாளுந்தான்
உண்மையாய்க் கற்பமுப்பு நூற்றுக்குள்ளே
நேயமுடன் சொல்லிவிட்டேன் குருமுடிக்க
நேர்த்தியுள்ள குருமுடித்துக் கற்பங்கொள்ளே (204)

வேறு.

என்னவே யிகத்தி லுள்ளோர்க்
கிரங்கியே சொன்ன மார்க்க
முன்னமே யுரைத்த நூலின்
முயற்சியா மிந்த சூத்ரம்
வன்னமாம் பாரு லோக
மாரண மாகச் செய்ய
முன்னமே சொன்னோமிந்த
வைத்யபூ ரணமு முற்றே. (205)

முற்றிற்று.

1 இதிற்கண்ட சுண்ண செந்தூர முடிக்க வேண்டுமானால் அகஸ்தியர் கற்ப முப்புக் குரு நூல் பார்க்க வெளியாய்த் தெரியும்.

உ

பரமபதி துணை.

அகஸ்தியர் வைத்திய பூரணம் 205-க்கு

# சூஸ்திரச் சுருக்கம் உக.

காப்பு.

ஆதியிலே யெனைவளர்த்த வாலைகாப்பு
அடைவான யிருநூற் றினைந்திலேதான்
நீதியுள பற்பமுடன் தயிலஞ்சொன்னேன்
நேர்மையுடன் சிலசரக்கை மறைத்துவிட்டேன்
சோதிமயச் சரக்கெல்லா மிதிலெடுத்துச்
சொல்லிவிட்டே னெல்லோரும் பிழைக்கவேண்டி
பாதிமதி தனியணிந்தோ னருளினாலே
பட்சமுடன் பாடுகிறே னறிவாய்க்கேளே

கேளப்பா நவலோக மாரணந்தான்
கெடியான வயித்தியமா மிருநூற்றஞ்சில்
தேளப்பா கொட்டுகல்போ லிந்தச்சூஸ்திரம்
செப்புவே னிருப்புக்குத் தாரங்கெந்தி
வாளப்பா வெள்ளியிரு வங்கத்துக்கு
மால்தேவி வெடியுப்பு வெள்ளைச்சீனம்
சூளப்பா செம்புக்குக் கெந்திவங்கம்
சூதமொடு துருசுவெள்ளை சாரமூன்றே. (1)

ஏகமூலிகைக்குப் பூதமருந்து.

சாரமது நாகமதைத் தாக்கிக்கொள்ளும்
சதாசிவமாந் தங்கமது கண்டால்நீறும்
காரமொடு அப்பிரேகம் நிமிளைசாகும்
கண்டபடி பித்தளையைக் கட்டிக்கொல்லும்
பாரமடா யேகமூலிகைக்குக் கேளு
பாஷாணம் நவச்சாரம் சீனம்பூரம்
வீரமொடு புழுகுவெடி யுப்புக்காரம்
விதயான சூதமொடு பூநீர்கெந்தி. (2)

கெந்தியுடன் வகைவீதஞ் சமனுப்ச்சேர்த்துக்
கெடியான பழச்சாற்றி லாட்டிமைபோல்
பந்திவிட்டுச் செய்யாதே மருந்தைப்பூசி
பச்சிலையில் நீருமுன் பகர்ந்ததெல்லாம்
முந்தியிந்தக் குருசெய்தா லுறுதியாகும்
முறையான வைத்திய நூ லொன்றும்பொய்யா
வந்தியென்ற துருசு நீர் கூடச்சேரு
வாகான வயித்தியத்திற் குருவிதாமே. (3)

தானென்ற தைலத்தின் மருந்தையெல்லாம்
சாற்றுவேன் சவுரிவேர்த் தைலத்துக்கு
கானென்ற மரமஞ்சள் விடையத்தோடு
கருஞ்சீரம் பலமரை தா னரைத்துக்கொண்டு
ஊனென்ற யெண்ணெயிலே கூடப்போடு
ஒகோகோ வில்வவேர்த் தைலத்துக்கு
நானென்ற கடுக்காய் கஸ்தூரி மஞ்சள்
நலமான ஏலஞ்சந் தனமுமாமே. (4)

ஆமப்பா வகைக்குக்காற் பலமரைத்து
அதைக்காய்ச்சு வேங்கையுட தைலத்துக்கு
தாமப்பா மிளகுள்ளி யோடே நீயும்
நற்சீரம் விலாமிச்சம் வேருங்கூட
வாமப்பா வகைக்குபல மரைத்துப்போடு
வகையான வெட்டிவேர்த் தைலத்துக்குத்
காமப்பா கருஞ்சீரந் தேவாரம்
கடுக்காயும் அதிமதுரம் பலந்தான்போடே. (5)

போடப்பா வேம்பினுட தைலத்துக்குப்
புகழான ஏலமொடு மிலந்தைவேறும்
நாடப்பா பழம்பாசி அக்கிராகாரம்
நலமாக வகைக்குபல மரைத்துப்போடு
பூடப்பா குறுந்தொட்டித் தைலத்துக்கு
பொங்கமுள்ள சுக்குஒன்று ஏலமொன்று
ஆடப்பா வகைக்குபல மரைத்துப்போடு
ஆகவே பதமாகக் காய்ச்சுகாய்ச்சே. (6)

காச்சடா கொடிவேலித் தைலத்துக்கு
காணடா கருஞ்சீரம் நற்சீரந்தான்
தாச்சடா தாளிசப்பத் திரியுங்கூடத்
தாணிக்காய் வகைக்குப்பல மரைத்துப்போடு
வீச்சடா சீரகத்தின் தைலத்துக்கு
மிளகுகார் கோலரிசி நற்கற்கண்டு
ஆச்சடா கருவேம்பி னிலையின் தண்டு
அவைவகைக்குப் பலவீத மரைத்துப்போடே. (7)

அரைத்துமே சூரிவேர்த் தைலத்துக்கு
அப்பனே வேம்பினுட பிசினுஞ்சுக்கு
குரைத்துமே போகாமற் காடிகூட்டிக்
குணமாகத் தானரைத்துப் போடுபோடு
உரைத்துமே ஆச்சுசிலின் பிசினுங்கூட
ஓகோகோ வகைக்குப்பல மரைதான்போடு
நிரைத்துமே இத்தைலம் பாகமாக
நேர்மையுடன் றூனிருக்கும் மூடித்துப்போடே. (8)

போடப்பா கீழ்நெல்லித் தைலத்துக்குப்
போடுவேர்ப் பூமிச்சர்க் கரையுங்கூட
வேடப்பா பலமொன்று அரைத்துச்சேர்த்து
வேம்பினுட பிசினோடு கடுக்காய்கூட
காட்டப்பா பலமரைத்து மூன்றுங் கூட்டிக்
காடிவிட்டுத் தானரைத்துக் கலக்கியேதான்
நாடப்பா தைலமதைச் செய்துகொண்டு
நலமான சட்டிதனி லூற்றிப்போடே. (9)

போடப்பா சங்கவேர்த் தைலத்துக்குப்
புகழ் கருஞ்சீ ரகமேலம் மிளகினோடு
நாடப்பா மாச்சக்காய் வகைவகைக்கு
நவிலுமோர் பலவீதம் நிறுத்துக்கொண்டு
பாடப்பா எண்ணெய்யிலே அரைத்துப்போடு
பதமாகப் பருவமுடன் காய்ச்சியேதான்
கூடப்பா சட்டிதனி லிருத்துக்கொண்டு
கூடும்வரை காய்ச்சலற ஆறவையே. (10)

காச்சப்பா அமுக்கிராவேர் தைலத்துக்குக்
காடியுடன் பழச்சாறும் நொச்சிச்சாறும்
மேச்சப்பா எருக்கின்பூச் சாறுங்கூட
மேன்மையுட னாட்டியே வகைக்குத்தானும்
வாச்சப்பா ஒன்றுக்குக் கால்படிச்சார்
வகையாகக் கிண்டியே கூட்டிக்காய்ச்சி
மாச்சப்பா தைலத்தின் பாகந்தன்னை
மற்றவர்க்குக் கிண்டுமுறை செப்பிடாதே. (11)

கிண்டப்பா இஞ்சியுட தைலத்துக்குக்
கேள்நொச்சிச் சாறுடனே பசுவின்பாலும்
கண்டப்பா வகைக்குஅரைப் படியாய்விட்டுக்
கசடில்லா யெண்ணெய்யுடன் காய்ச்சிக்கொள்ளு
அண்டருக்குந் தெரியாது இந்தப்பாகம்
அப்பனே வெளியாகச் சொல்லிவிட்டேன்
கண்டுகொண்ட பேர்களுக்குக் கிட்டுங்கிட்டும்
கணக்கறியா னித்தைலங் காய்ச்சுவானே. (12)

காச்சப்பா செம்முள்ளித் தைலத்துக்குக்
ஈண்டகருஞ் சீரகங்கற் றாழைவேரும்
வாச்சப்பா கார்கோல அரிசிகூட
வகைக்கு அரைப் பலமரைத்துக் காய்ச்சிப்பாரு
நீச்சப்பா தைலத்தின் பாகந்தானும்
நேரான மெழுகுபதந் தெரிந்துகொண்டு
பாச்சப்பா பாண்டத்தில் வடிதான்கட்டிப்
பண்புடனே மாயவலை தன்னைத்தாண்டே. (13)

தாண்டவே யிருவேலித் தைலத்துக்குத்
தரளிச்சார் பழச்சாறும் கையான்சாறும்
தீண்டவே வகைக்குக்காற் படிதான்சேர்த்துத்
திறமாய்நல் லெண்ணெய்யதிற் கலந்துகொண்டே
வேண்டியதோர் தீயதனைச் சிறுகெரித்து
மெழுபதங் கண்டறிந்து தைலந்தன்னை
ஆண்டவனைத் தோத்கரித்து இறக்கிவைத்து
அப்பனே காய்ச்சல்தனை ஆறவையே. (14)

காச்சப்பா நற்கரிப்பான் தைலத்துக்குக்
கற்றாளஞ் சாறுநெல்லிக் காயின்சாறும்
நீச்சப்பா வகைக்குக்காற் படியெடுத்து
நீட்டியகஸ் தூரிமஞ்ச ளரைப்பலந்தான்
ஏச்சப்பா சாதிக்கா யரைத்துப்போட்டு
எண்ணெய்யுடன் தான்கரைத்து வைத்துக்கொண்டு
வாச்சப்பா அடுப்பதனி லேற்றிநன்றாய்
வகையுடனே காய்ச்சியதை யிறக்கிவையே. (15)

காச்சப்பா அகிர்கட்டைத் தைலத்துக்குக்
கனமான அதிமதுரந் தாணிக்காயும்
வீச்சப்பா வகைக்குப்பல மரைத்துப்போடு
வீரான அறுகம்வேர்த் தைலத்துக்கோ
கூச்சப்பா கோரையுட கிழங்கினோடே
கூரான அமுக்கிரா கூடக்கூட்டி
வாச்சப்பா பூமிச்சர்க் கரைக்கிழங்கு
வகைக்குக்காற் பலமாக நிறைநிறுத்தே (16)

நிறுத்துநீ கல்வத்தி லாட்டிக்கொண்டு
நேராக யெண்ணெய்யிலே அரைத்துப்போட்டு
சிறுத்துநீ போட்டிடுவா யப்பாகேளு
திறமான கொடுப்பையுட தைலத்துக்கு
மறுத்துகருஞ் சீரகமுங் கோஷ்டங்கூட
மதுரமுடன் செங்கழுநீர் ஆவின்பாலும்
உறுத்துமே வகைக்குப்பல மரைத்துப்போடு
உத்தமனே சென்னகரைப் பட்டைகேளே. (17)

கேளப்பா வேப்பெண்ணெய் படிதானென்று
கெடிவசம்பு வெள்ளுள்ளி பலந்தானென்று
சூளப்பா வெட்டிவேர் பலந்தானென்று
சுருளவே கூட்டிநன்றா யரைத்தெடுத்து
நாளப்பா யெண்ணெய்யிலே சேர்த்துக்கொண்டு
நலம்பெறவே பதமாய்ப்பாண் டத்திலூற்றி
வாளப்பா அடுப்புதனி லேற்றிநீயும்
மைந்தனே சிறுதீயா லெரித்துக்காய்ச்சே. (18)

காச்சென்ன அபினியுட தைலத்துக்குக்
கண்பணியே சங்கிலேகற் றூளேரெண்டும்
பேச்சென்ன வகைக்குக்காற் படிவீதந்தான்
பெலமான தைலத்தி லிட்டுமேதான்
வாச்சென்ன அடுப்பேற்றிச் சிறுதீயாலே
மைந்தனே மெழுகுபதத் துடனேகாய்ச்சு
காச்சுகின்ற யிருப்பவலின் தைலத்துக்கு
கறிமஞ்சள் கஸ்தூரி மஞ்சளாமே. (19)

மஞ்சளுட னிருவகையும் பலந்தான்கூட்டி
யான்புடனே அரைத்தெண்ணெய் யதினிற்சேர்த்து
தஞ்சமுட னெண்ணெய்தனைக் காய்ச்சிமூழ்கச்
சகலபிணி தீர்ந்திடுவ தல்லால்வேறே
வஞ்சியரி னாசைதனைத் தள்ளவேண்டும்
மகத்தான பெரியோரின் முறையைத்தானே
எஞ்சலுடன் செய்துவயிர் பிழைக்கவேண்டும்
என்மகனே நாமறிந்த விதந்தான்பாரே. (20)

நாமப்பா பற்பமுதல் தைலப்போக்கை
நன்றாகக் கருக்கடையிற் பாகஞ்சொன்னேன்
தாமப்பா பூரணந்தா னிருநூற்றைந்தில்
தவறாமற் செய்தாக்கா லிதற்கீடாமோ
வாமப்பா சுருக்கமதைத் தெரிந்தோன்றன்னே
வைத்தியத்தில் தேர்ச்சியென்று மதித்துக்கொள்ளு
நாமப்பா வெளியாகச் சொன்னேன்பாரு
நற்சுருக்க மிருபத்து ஒன்றுமுற்றே. (21)

வெண்பா.

வங்கம்செம் பொன்னுக்காம் மாச்சியம் வெள்ளிக்காம்
எங்கும்லிங் கங்க ளிரும்புக்காம்—தங்கத்தைத்
தாரமே கொன்றுவிடுந் தள்ளாத போகமதாம்
சேரும்செம் புக்குகெந்தி தேர்.

அகஸ்தியர் வைத்திய சூஸ்திரச் சுருக்கம் 21
முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# அகஸ்தியர் வைத்திய பூரணம்—205ல்

## சொல்லிய மருந்துகளுக்கும்

## அதனால் தீரும் வியாதிகளுக்கும் அட்டவணை.

| பக்கம் நம்பர் | பற்பங்கள். |
|---|---|
| 5-வது | பக்கத்தில் சொல்லிய அயபற்பம் செய்து சாப்பிட பாண்டு ரோய், குஷ்டம், சூலை போம், |
| 6-வது | காந்த பற்பம் செய்துசாப்பிட கிராணி, சோகை. பாண்டு, பிரமேகங்கள் நீர்க்கிரிச்சனம் இவைகள் போம். |
| 6-வது | தாம்பிரபற்பம்செய்து சாப்பிட கிராணி. சோகை, பாண்டு ஜலக்கழிச்சல், பிரமேகம், நீர்க்கிரிச்சினம் போம், |
| 7-வது | இரசபற்பஞ் செய்து சாப்பிட 18-சூலையும், 18-குஷ்டமும், கிரந்தி, யரையாப்பும், க்ஷயங்களும போம் |
| 7-வது | வெள்ளீயப் பற்பம் செய்து சாப்பிட நீர்ச்சுரப்பு, கல்லடைப்பு, தசையடைப்பு, நீர்க்கிரிச்சினங்கள போம். |
| 8-வது | காரீயப் பற்பஞ் செய்து சாப்பிட சூலை, குஷ்டம். கிரந்தி பிரமேகம், தேககாந்தல், நீர்க்கடுப்பு. நாவறட்சி போம், |
| 8-வது | வெண்கலப் பற்பஞ் செய்து சாப்பிட க்ஷய ரோகம், சூலை மாந்தை, வாய்வு குன்மம் தீரும். |
| 9-வது | திராபற்பஞ் செய்து சாப்பிட நீர்க்கிரிச்சினம், வண்டுகடி, சில்விஷங்கள், க்ஷயரோகம், குஷ்டம், 18-சூலை போம். |
| 9-வது | பித்தளைப் பற்பஞ் செய்து சாப்பிட வாய்வு குன்மம், கிராணிமூலம், பாண்டு, நீர்ச்சுரப்பு, வாய்நீரூறல், குடல் வாய்வு, பாரிச வாய்வு தீரும். |
| 10-வது | ஒழுகரைப் பற்பம் சாப்பிட பாண்டு, சோகை, வீக்கம், மகோதரம், நீராம்பல் போம், |
| 10-வது | பால்கருடக்கல் பற்பம் சாப்பிட உஷ்ணம், தேகக்கடுப்பு, எலும்புருக்கி, உள்வறட்சி, அஸ்திச்சூடும் போம். |
| 11-வது | கல்நார் பற்பம் சாப்பிட க்ஷயமிருமல், காசம், சுவாச காசம், மந்தார காசம் போம், |
| 11-வது | நாகபற்பம் சாப்பிட குஷ்டம், குறைநோய் சில்விஷம், வாதவாய்வு கிரந்தி, சூலை, பாண்டு, வயிற்றுவலி, மகோதரம், பாதவீக்கம், சந்துவாதம் போம். |
| 12-வது | வெள்ளி பற்பம் சாப்பிட குன்மம், நீர்க்கட்டு, ஆண்குறி |

சதையடைப்பு, மயக்கம், கபம், மூச்செரிவு, மூக்குநீர்ப் பாய்ச்சல், பீனிசம, மண்டைச்சூலை போம்

13-வது தங்க பற்பம் சாப்பிட க்ஷயம், காசம், கபம், பீலை, உள் மாந்தை, மகோதரம், குன்மம், வாய்வு, நீராம்பல், சூலை, கண்ணோய், குஷ்டம், கிரந்தி, நீரழிவு, பிரமேகம் போம். இதைச் செம்பு வெள்ளியிற் கொடுக்க நாலு வயதாகும்.

14-வது கெந்தக பற்பம் சாப்பிட குஷ்டம், குறைநோய், கிரந்தி, சூலை, வயிற்றுவலி, சில்விஷம், வாதவாய்வு. மகோதரம், பாதவீக்கம், பாண்டு தீரும்.

15-வது மண்டூரப் பற்பஞ் சாப்பிட பாண்டு, வீக்கம், மந்தாரகாசம். விஷரோகம் போம்.

15-வது அஞ்சனக்கல் பற்பஞ் சாப்பிட மேகம் இருபதும் போம் தேக அழகுண்டாகும்

16-வது தாளக பற்பஞ் சாப்பிட க்ஷயரோகம், மந்தாரகாசம், கபம், உள்மாந்தை, இருமல் பிளைப்பு, குறைநோய், காணுக்கடி, விஷம், குஷ்டம் போம்.

17-வது சாதிலிங்க பற்பஞ் சாப்பிட குன்மவாய்வு, சன்னிவாதம், பாரிசவாய்வு, சூலை, பீலை, இளைப்பும் போம்.

17-வது வீரபற்பம் சாப்பிட சூலை, குன்மம், பூராவாய்வும், போம். ஆனல் சரீரம் சட்டை வாங்கும்,

18-வது பொரிக்கார பற்பம் சாப்பிட நீர்க்கடுப்பு அதிக நீரிறங் குதல், கல்லடைப்பு சதையடைப்பும் போம்

18-வது சாஸ்திரபேதி பற்பம் சாப்பிட சுரம், உஷ்ணங்களும் போம். தேக வுளைச்சல்களை நீக்கும்.

19-வது வெண்குந்திரிக்க பற்பம் சாப்பிட பல்கடுப்பு, பல் ரத்தம், பல்லுவலி, பல்லாடுதல் போம்,

20-வது பவள பற்பம் சாப்பிட தேகபுஷ்டி, தேக அழகுண்டாகும் இருமல், காசம் போம், இரத்தம் ஊறும்.

21-வது வயிர பற்பம் சாப்பிட தேகம் வச்சிரகாயமாகும். காய சித்தியாகும்,

21-வது இரத்தின பற்பம் சாப்பிட சகல வியாதியும், தேகவறட் சியும் போம்.

22-வது பாசாண பற்பம் செய்து சாப்பிட சுரம், குளிர் சுரம், நாவறட்சியும் போம்.

23-வது சார பற்பம் சாப்பிட வாய்வுக் கட்டி, ஆம்பல் கட்டி, குன்மம், கபரோகம் போம்.

24-வது உப்புப் பற்பம் சாப்பிட வாய்வு, பாரிச வாய்வு, சூலை

மகோதரம், நீர்த்தோஷம் போம். இந்த உப்பை வெள்ளி செப்பில் கொடுக்க வயதைந் தாகும்

26-வது ஆமையோட்டுப்பற்பம் சாப்பிட கண்களின் வியாதி 96ம் முயலகன் ரோகமும் போம்.

26-வது முத்து பற்பஞ் சாப்பிட வாயுவும், பிரமேகம், நீரிழிவும், போம பல்லிறுகும், பல்வலி போம.

## சுண்ணம்.

27-வது கற்பூரச் சுண்ணம் சாப்பிட தேகம் வச்சிரகாயமாகும். கண் பிரசாசமாகும், வாய்ரோரகம் மலசலக்கட்டு நீங்கும்.

28-வது துருசு பற்பம் சாப்பிட வாதவாய்வு போகும், இந்தச் சுண்ணத்தால் வகார முடியும்.

30-வது பொன்னிமிளைப் பற்பம் சாப்பிட எட்டுக்குன்மம், சூலைக் கட்டு, விப்புருதிக்கட்டு, அஸ்ரயாப்புக் கட்டி போம்

## முழுகுந் தைலங்கள்.

32-வது சந்தனத் தைலம் முழுகிவர மேகமும், மேகநீரும் போம் தேகமிருகும்

32-வது வில்வவேர்த் தைலம் முழுகிவர பித்தம், உஷ்ணம், மேகம், உள்சுரம் போம், கண்ணுக்குத் தெளிவு தரும்

33-வது வேங்கைத்தைலம் வாதம், சூலை, பீனிசம், மண்டையிடி, சத்திவிக்கல், கண்ரோகம், முதலியன தீரும்.

33-வது வெட்டிவேர்த் தைலம் முழுகிவர மண்டைச்சூலை. தேமற் குஷ்டம், பிறநீர்க்கோர்வை, கண்புகைச்சல், காதுமந்தம் யிளையிளைப்பு, தேக எரிவு போம்.

34-வது வேம்பின் பட்டைத் தைலம் முழுகிவர வாதம், சூலை, குஷ்டம், நீரிழிவு, கரப்பான் போகும்.

34-வது குறுந்தொட்டிச் தைலம் முழுகிவர தினவுசொரி, சிரங்கு, குஷ்டம், கிரந்தி, சூலை, புண்புறைபோம்.

35-வது கொடுவேலித் தைலம் முழுகிவர தினவு, சொரி, சிரங்கு, கிரந்தி, சூலை போம்.

35-வது சீரகத் தைலம் முழுகிவா குஷ்டம், தழுதணை, வாந்தி, பித்தம், கிறுகிறுப்பு, சோகை, பாண்டு, கபாலச்சூடு, வாயுவும் போம்.

36-வது சூரிவித்துத் தைலம் முழுகிவர கிரந்தி, குஷ்டம், சூலை, குன்மம், கிராணி, உள்மூலம் மலக்கட்டு போம்.

37-வது கீழ்க்காய்நெல்லித்தைலம் முழுகி பித்தம், கிறுகிறுப்பு தலைசுழற்றல் வாய்நீரூறல், மேலெரிவு இரத்த பித்தம், யிளையிளைப்பு, கைகால் காந்தல், போகும, வெளுத்தமயிர்

கருக்கும், கண்ணெரிவு நீங்கும்

37-வது சங்கம்வேர்த் தைலம் முழுகிவர குஷ்டம், சொரி சிரங்கு, கிரந்தி, சூலை, செங்கரப்பான், வண்டுகடி, சில்விஷங்கள், க்ஷயம், இருமல் போம்.

38-வது அமுக்கிரா வேர்த் தைலம் முழுகிவர பீனிசம், மண்டையிடி உஷ்ணமும் போம்.

38-வது இஞ்சித் தைலம் முழுகிவர மண்டையிடி, சூலை, பீனிசம், யீளை யிளைப்பும் போம்

39-வது செம்முள்ளித் தைலம் முழுகிவர சயமீளை, மந்தாரகாசம், கண்ணில் நீர்வடிதல், அண்டவாய்வு, வீக்கம், விஷம், அரையாப்பு, கிரந்தியும் போம்.

39-வது சாரணைவேர்த் தைலம் முழுகிவர சகல வாதமும் போம். தேகம் குளிர்ச்சி யுண்டாகும்.

40-வது இருவேலித் தைலம் கிருகிருப்பு, கண்புகைச்சல், தீரும்.

40-வது 49-வது அகிற்கட்டைத்தைலம முழுகிவர நீர்த்தோஷமும், சகல மேகங்களும் போம.

40-வது அறுகம்வேர்த் தைலம் முழுகிவர மூலச்சூடு, கபாலச்சூடு, யோகச்சூடு, பித்தச்சூடும், நீர்க்கடுப்பும் போம்.

41-வது கொடுப்பைத் தைலம் முழுகிவா மண்டையிடி. பித்தக் கிறுகிறுப்பு, சனனிதாகம், உட்சுரம், மேலெரிவு, கைகால் காந்தல், கண்ணெரிவு, எரிகுணமும் போகும். கண் தெளிவுண்டாகும்.

41-வது கையாந் தகரைத் தைலம் முழுகிவா கண்ணெரிவு, தலைநோவு, செவிநோவு பீனிசம், மண்டையிடி, போகும்.

42-வது சவுரித் தைலம் முழுகிவா வாதகுட்டம், கரப்பான். வீக்கம் போம்

42-வது செங்காவற் பட்டைத் தைலம் முழுகிவர வாதபித்த சோகை போம்.

43-வது அகிற்பட்டைத் தைலம் வாதம் யாவும் நீங்கும்.

43-வது திராப்பாசித்தைலம் முழுகிவர சகலவாத நோய்கள் தீரும்.

## சாப்பிடும் தைலம்

49-வது தம்மட்டித் தைலஞ் சாப்பிட கெற்ப பூச்சியைப் போக்கி கெற்பமுண்டாகும்.

51-வது பாகலிலைத் தைலஞ் சாப்பிட நீரடைப்பும், மலக்கட்டும், கிருமி கெற்பப் புழுவும் போம்.

56-வது சிவனார் வேம்புத் தைலம் சாப்பிட குட்டம், சூலை, கட்டி, விஷம் போம், கால் வெடிப்புக்கும், புண்களுக்குந் தடவிவர குணமாகும்.

56-வது வீழித் தைலம் சாப்பிட குஷ்டம் வெண்குட்டம் போம்.

56-வது சேங்கொட்டைத் தைலம் சாப்பிட சகலநோயும் போம், நரைதிரை மாறும்.
57-வது தேற்றான் கொட்டை விரைத் தைலம் சாப்பிட சகல வியாதியும் போம். தேக அழகுண்டாம்.
57-வது வெண்புரசுத் தைலம் சாப்பிட 18க் குட்டங்களுந் தீரும்.
57-வது வாலுளுவையரிசித் தைலம் சாப்பிட சகலரோயும், பத்து படைகளும போம்.
58-வது கருஞ்சீரகத் தைலம் சாப்பிட சிரங்கு, குஷ்டம், சூலை, கரப்பான், தமுதணையும் போம்.
58-வது அமுக்குரா வேர்த் தைலம் சாப்பிட சூலை, கிராணி, குஷ்டம் போம்,
58-வது ஓமத் தைலம் சாப்பிட சகல வியாதியும் போம். திரேக சூடுண்டாகும்,
58-வது சாரணைத்தைலம் சாப்பிட கிரந்தி, குஷ்டம், சூலைபோம்
59-வது வெங்தோன்றிக் கிழங்குத் தைலம் சாப்பிட 18 குட்டம் போம் காய சித்தி யுண்டாம்

## மேற்பிரயோகத் தைலம்.

50-வது முசுறுமுட்டைத் தைலம் காதில் விட காது வலி போம். காதுகேளாதது கேட்கும், சீழ்நீற்கும், காதடைப்பு விடும்
51-வது வெள்ளைவேல் தைலம் வாயில் விட்டுக் கொப்பளிக்க பல்லிறுகும், வாய்ப் புண்ணாறும்.

## கிருதம்.

44-வது பொன்னாங்காணிக் கிருதம் சாப்பிட உள்சுரம், மேகம், போம். கண் ரோகம் 18-ம் போம்.
44-வது சதாவேரிக் கிருதம் சாப்பிட வயிற்றிரைச்சல், பித்தம், இறுகிறுப்பு, வயிற்றுக்கிருமி, செரியா மாந்தமும் போம்.
45-வது திரிகடுகுக் கிருதம் சாப்பிட 16 விதக் கரப்பான, சிரங்கு, குஷ்டம், கிரந்தி, கிருமி, கிராணி மூலம் போம்.
45-வது தூதுவளைக் கிருதம் சாப்பிட இருமல், கபம், உட்சுரம், துப்பு, கக்கல் போம்.
46-வது சன்னித் தைலம் சாப்பிட சன்னி பதினெட்டும் போம்.
50-வது கொம்பரக்குக் கிருதம் சாப்பிட கிராணி மூலம், குறுக்கு வலி, மூலச்சூடு, காதடைப்புத் தீரும்.

## குழம்பு.

47-வது நவச்சாரக் குழம்பு சாப்பிட பெருவயிறு, மகோதரம், ஆம்பல் கட்டி, விஷபாகம், மலக்கட்டும் போம்.

## சூரணம்.

47-வது மேனிச்சூரணம் சாப்பிட வாய்வு, மாந்தம், சில் விஷம் போம். தீபனமகிகரிக்கும்

48-வது சீரகச் சூரணம் சாப்பிட நீர்க்கடுப்பு, மேகம், உட்சுரம், குன்மம், எலும்புருக்கி தசையடைப்பு, தாகம், வாய்நாற்றம் போம்.

48-வது குரோசாணி யோமச் சூரணம் சாப்பிட கடுப்பு, யீளை, இளைப்பு, மூலச்சூடு போம்

48-வது கொடிவேலி வேர்ச் சூரணம் சாப்பிட சூலை, கிரந்தி, குஷ்டம், வண்டுகடி, எலி கடி போம்

## கியாழம்.

52-வது மருதோன்றி வேர்க் கியாழம் சாப்பிட முறைச்சுரம், விஷச்சுரம், மூலவாய்வு, பித்தம், மாந்தம் போம்.

52-வது வெட்பாலைக் கியாழம் சாப்பிட வாய்வு எரிச்சல், குன்மம் போம்

52-வது வில்வவேரும் முன்னைவேருஞ் சேர்த்துக் கியாழஞ் செய்து சாப்பிட வீக்கம்; வாந்தி, உழலை தாகம், முறைச்சுரம் போம்

53-வது முத்தக்காசுக் கியாழம் சாப்பிட க்ஷயம், யீளை, யிளைப்பு, அதிக மூச்சு விடுதல் போம்

53-வது திரிபலாதிக் கியாழம் சாப்பிட கபம், யீளை, யிளைப்பு. க்ஷயம், காய்ச்சல் தீரும்.

54-வது சந்தனக் கியாழம் சாப்பிட சுரம், வாய்வு, சலதோஷம், சிரசுப்பித்தம் போம்.

54-வது வேம்புக் கியாழம் சாப்பிட புழுக்கிருமி, மந்தம், வாய்வும் போம்.

54-வது இருவேலிக் கியாழம் சாப்பிட வாய்வு, பித்தம், சோகைப் பாண்டு, அரோசிகம் போம்.

## அவியல் கியாழம்

54-வது பச்சிலைப் புட்டவியல் கியாழம் சாப்பிட சுரம், உட்சுரம். வாத வாய்வு போம்.

55-வது முசுமுசுக்கை அவியல் கியாழம் சாப்பிட வாதசுரம், விடாச்சுரமும் போம்.

55-வது மூலிகை அவியல் கியாழம் சாப்பிட சுரம், வாதசுரம்போம்

அகஸ்கியர் வைத்திய பூரணம் 205 க்கு அட்டவணை

முற்றிற்று.

உ

நேரியால்லாசாதேவேதி
யைானுநாளை க்கள்.
60.
சோப்பிகலை [illegible]
டோ. 36
[illegible] கலைபிர்க [illegible]
[illegible]
[illegible] 37
பரமொ [illegible] க்கம்
[illegible] வெ [illegible] வார்
[illegible]. 38
பாஜுவி [illegible]
[illegible]
[illegible]
[illegible] வாசய. 40
[illegible]
[illegible]
[illegible]
[illegible]. 46
[illegible]
[illegible] வாதெ. 56
[illegible]
ரூ
[illegible]
[illegible] யல்லாம்வா [illegible]

உ

பரமபதி துணை.

# யாகோபு முனிவர் இயற்றிய

## 17-சாஸ்திரங்களின் விபரம்.

| | |
|---|---|
| வைத்திய சிந்தாமணி 700 ஷை குருநூல் 55 சேர்ந்தது. | 2—8—0 |
| சுண்ணக்காண்டம் 600 | 2—0—0 |
| ஷை சுண்ணம் 300 | 1—8—0 |
| ஷை சுண்ணசூஸ்திரம் 155 ஷை சூஸ்திரம் 57 சேர்ந்தது | 1—0—0 |
| லோகச்செந்தூரம் 300 | 1—4—0 |
| செந்தூர சூஸ்திரம் 150 ஷை சூஸ்திரம் 55 சேர்ந்தது | 1—0—0 |
| வகாரக் களங்கு என்னும் வாத வைத்தியம் 300 | 1—8—0 |
| பஞ்சமித்திரம் 300 | 1—8—0 |
| தண்டகம் 110 ஷை சூஸ்திரம் 55 ஷை இடைபாகம் 16 செய்பாகம் 16 சேர்ந் | 1—0—0 |
| வைத்திய வாதசூஸ்திரம் 400 | 2—0—0 |
| வைத்தியம் 300 சரக்கு சுத்தியும் நாடி விபரமும் சேர்ந்தது | 1—8—0 |
| வைத்திய கல்லாடமும் ஷை 17 சாஸ்திரங்களுக்கும் அரும்பத உரையும் | 2—0—0 |

ஆக மொத்தம் 17 சாஸ்திரங்கள். புத்தகம் 12.

மேற்கண்ட சாஸ்திரங்களை பன்னிரண்டு புத்தகங்களாக அச்சிட்டுத் தனித்தனியாகவும் மொத்தமாய் ஒரே கோர்வையாகவும் பயிண்டுசெய்திருக்கிறது தேவையுள்ளவர்கள் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம் தெரிவித்தால் கேட்லாக்அனுப்பக்கூடும். இப்படிக்கு.

இ. ராம. குருசாமிக்கோனார் சன்,

**ஜீ. இராமசாமிக்கோன்**

புத்தகசாலை புதுமண்டபம், மதுரை.